Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

விலை : ரூபா 20.00

புதிய பொலிவுடன் உள்ளே... "சுப்பர்ஸ்டார்" ரஜனிகாந்த்

செய்தி – 34 மே 21–27, 2016 பக்கம் – 20

# போரில் இறந்த சொந்தங்களுக்கு நினைவுத் தூபி அமைக்க 8 பரப்பு காணியை திரு. அமிர்தலிங்கம் அன்பளிப்பு



திரு. அமிர்தலிங்கம்

(யாழ்ப்பாணம்)

போரில் இறந்த சொந்தங்களுக்கு 'தினச் செய்தி' 60 அடி உயரத்தில் முள்ளிவாய்க்கால் மேற்கில் நினைவுத் தூபி அமைப்பதற்கு ½ ஏக்கர் (8 பரப்பு, 80 பேச்சர்ஸ்) நிலம் அன்பளிப்பாக கிடைத்துள்ளது.

**பெரிய வளவு 8 பரப்பு நிலம்**

நினைவுத் தூபி அமைப்பதற்கு முள்ளிவாய்க்கால் மேற்கில் பிரதான வீதியில் "பெரியவளவு" என்ற பெயர் கொண்ட 8 பரப்பு நிலத்தை அ. அமிர்தலிங்கம் தினச்செய்திக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

தினச்செய்திக்கு இவ்வாறு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலத்தை திரு. அமிர்தலிங்கம், தாயார் அழகமணி பார்வதி, தாய் மாமன் சின்னய்யா நாகரத்தினம் ஆகியோரின் பெயரில் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்தக் காணி முள்ளிவாய்க்காலில் உள்ள ஸ்ரீ குமார கணபதிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ளது.

2 இல்









திரு. அ. அமிர்தலிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். கனகரட்ணம்

## இராவணன் ஆண்ட இலங்கையில் சீதைக்குக் கோயில்



(கொழும்பு)

சீதைக்குக் கோயில் ஒன்றை இந்தியர்கள் இலங்கையில் கட்டுகிறார்கள். இந்திய மத்திய பிரதேச அரசாங்கம் சீதைக்கு இலங்கையில் கோயில் கட்டுவதற்கு இலங்கை அரசு அதற்கு தேவையான காணியை வழங்க சம்மதம் தெரிவித்துள்ளது.

இராமனின் மனைவியான சீதை இலங்கையில் அக்கினிப் பரீட்சை செய்த இடத்தில் மத்திய பிரதேச முதலமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் இக் கோயிலைக் கட்டத் திட்டமிட்டுள்ளார். இந்தக் கோயில் நிர்மாணிக்கும் திட்டம் கடந்த ஐந்து வருடமாக நிறைவேறாமல் இருந்து வந்தது.

2 இல்

## ஜெயலலிதா மீண்டும் வெற்றி

### அசாம் கேரளா மேற்கு வங்காளத்தில் காங்கிரஸ் படுதோல்வி

(சென்னை)



சென்ற 19 ஆம் திகதி வெளிவந்த இந்தியாவின் 5 மாநிலங்களுக்குமான தேர்தல் முடிவுகளில் தமிழ் நாட்டின் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஜெயராமின் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 134 ஆசனங்களை பெற்று வெற்றி பெற்றது. மீண்டும் ஜெயலலிதாவே முதலமைச்சராக தெரிவு செய்யப்படவுள்ளார்.

அதே நேரத்தில் அசாம், கேரளா ஆகிய மாநிலங்களில் ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சி படுதோல்வியடைந்தது.

அசாம் மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சி கூட்டணி 84 ஆசனங்களை பெற்று வெற்றி பெற்றுள்ளது. விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சரான சர்வானந்தா சடோபன் தலைமையில் பிஜேபி அரசாங்கம் உருவாக்கப்படும் என்று எதிர்பாக்கப்படுகிறது.

19 இல்



# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk


## யாழ் போதனா வைத்தியசாலை

வடமாகாணத்திலுள்ள மிகப் பெரிய வைத்தியசாலைகளில் ஒன்று யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை. இந்த வைத்தியசாலைக்கு வடமாகாணத்திலுள்ள எல்லா ஆதார வைத்திய சாலைகளிலிருந்தும் தீர்க்க முடியாத நோயாளிகளை அனுப்பி வைக்கின்றார்கள்.

இங்கே நோய் தீர்ப்பதற்குத் தேவையான எல்லா வித கருவிகளும், மருத்துவ விற்பன்னர்களும் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மற்ற வைத்தியசாலைகளிலிருந்து அனுப்பி வைக்கும் நோயாளர்களை குணப்படுத்தி மீண்டும் வீட்டிற்கு அனுப்பி வைப்பார்கள் என்ற நம்பிக்கையில் தான் வருகிறார்கள். ஆனால் இப்பொழுது நோயாளர்களை அம்புலன்ஸ் வண்டியில் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப முன்வந்தால் நோயாளர்கள் அங்கே செல்ல பயப்படுகிறார்கள்.

“எங்களை அங்கே அனுப்பாதீர்கள். அங்கே போய் சாவதை விட இங்கே இருந்து சாகிறோம்,” என நோயாளர்கள் ஓலமிடுகிறார்கள்.

இவ்வாறு நோயாளர்களின் பயத்துக்கான காரணத்தை இது வரை அறியமுடியாமல் இருந்தது. ஆனால் அண்மையில் நடந்த சம்பவத்தின் மூலம் நோயாளரின் பயம் நியாயமானது தான் என்று தெரிய வருகின்றது.

உதாரணத்திற்கு – சென்ற 12 ஆம் திகதி மாலை தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையிலிருந்து ஒரு பெண் நோயாளியை அம்புலன்ஸ் வண்டியில் அனுப்பி வைத்தார்கள்.

அந்த நோயாளிக்கு நீரிழிவு, இரத்த அழுத்தம், சிறுசீரகம் இயங்காமை, இருதய நோய் போன்ற பல தரப்பட்ட நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தார் என்ற காரணத்தினால் தான் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆனால் அவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரவு 8 மணிக்குச் சென்ற அந்த நோயாளியை அவசரசிகிச்சைப் பிரிவில் அனுமதித்தார்கள். மறுநாள் அதிகாலை 2 மணிவரைக்கும் அவசர சிகிச்சைப் பிரிவிலேயே அந்த நோயாளி இருந்தார். எந்த விதமான பரிசோதனைகளும் செய்யவில்லை. மேலும் எந்த விதமான மருந்து மாத்திரைகளும் வழங்கப்படவில்லை. சேலைன் மாத்திரம் ஏற்றினார்கள்.

பின்னர் அந்த நோயாளியை ஆரம்பத்தில் 2 ஆவது வார்ட்டுக்கும், அதையடுத்து 3 ஆவது வார்ட்டிலும் அனுமதித்தார்கள். 13 ஆம் திகதி காலையில் அவரது உறவினர்கள் அவரை வார்ட்டில் சென்று பார்த்த போது சிறுநீர் வெளியேறாததால் வயிற்றில் குத்தும், உபாதையும் இருப்பதாக அழுதவாறே அந்த நோயாளி முறைப்பாடு செய்தார்.

அந்த நோயாளியின் உறவினர் வார்ட்டில் வைத்தியரிடம் சென்று முறையிட்ட போது அந்த வைத்தியர் நாங்கள் நோயாளியை அவதானித்துக் கொண்டு தான் இருக்கிறோம் என்று கூறினார். அவரை நன்றாக கவனியுங்கள், அவருக்குத் தேவையான மருந்து மாத்திரைகளையும் வழங்குங்கள் என்று நோயாளியின் உறவினர்கள் கேட்டுக் கொண்டனர்.

14 ஆம் திகதி 1.20 மணி வரைக்கும் மொத்தமாக அந்த நோயாளிக்கு 43 மணிநேரம் வரை எந்த விதமான மருந்து, மாத்திரையோ, ஊசியோ வழங்கப்படவில்லை. இறுதியில் 14 ஆம் திகதி நண்பகல் 1.20 மணிக்கு அந்த நோயாளியின் உயிர் பிரிந்தது.

யாழ் வைத்தியசாலை வைத்தியர்கள் “கண்காணிக்கின்றோம், கண்காணிக்கின்றோம,” என்று எதைத் தான் செய்கிறார்களோ தெரியவில்லை.

யாழ் போதனா வைத்தியசாலையில் ஏராளமான வைத்திய நிபுணர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லோரும் யாழ் மாவட்டத்திலுள்ள தனியார் வைத்தியசாலைகளுக்குச் சென்று ஆயிரமாயிரமாகச் சம்பாதிக்கிறார்கள். ஆனால் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கும் நோயாளிகளை கவனிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. போதனா வைத்தியசாலை என்றால் நோயாளிகள் தங்கள் உயிரை விடும் இடம் என்று நினைக்குமளவிற்கு படிப்படியாக மாறிவருவது வேதனைக்கும், கண்டனத்திற்கும் உரிய விடயமாகும்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## போரில் இறந்த ...

ஏற்கனவே மே 16 ஆம் திகதி தினச்செய்தியில் இவ்விடயம் வெளியிட்ட போது வாய்மொழி மூலம் போரில் இறந்த சொந்தங்களுக்கு நினைவுத் தூபி அமைப்பதாயின் அதற்குத் தேவையான காணியை வழங்குவதாகக் திரு. அமிர்தலிங்கம் கூறினார். இது சம்பந்தமாக ஏற்கனவே ‘முள்ளி வாய்க்காலைச் சேர்ந்த பிரமுகர் ஒரு வர் தினச்செய்திக்கு காணி அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளார்’, எனக் குறிப்பிட்டிருந்தோம்.

அதையடுத்து சென்ற வியாழக்கிழமை நடந்த பேச்சுவார்த்தையில் அவர் காணியை அன்பளிப்பாக வழங்க முன்வந்ததை உறுதி செய்தார்.

பிரதான வீதியில் (புதுக்குடியிருப்பு – முள்ளிவாய்க்கால்) அமைந்துள்ள இந்நிலம் ரூபா ஒரு கோடி பெறுமதி வாய்ந்தது என்று அப் பகுதி மக்களைத் தொடர்பு கொண்ட போது அறியத் தந்தார்கள்.

### அமிர்தலிங்கத்தின் குடும்பம் ஷெல் வீச்சில் பலி

முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த திரு. அமிர்தலிங்கம் பல சமூக சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார். சென்ற மே 5, 2009 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்திலே அவரது மனைவி திருமதி அமிர்தலிங்கம் புஷ்பாதேவி (வயது 49), மனைவியின் தாயார் நாகரத்தினம் செல்லச்சரஸ்வதி (வயது 65), அவரது வீட்டில் வசித்துக் கொண்டிருந்த நாகரத்தினம் சௌந்தர்ராஜா (வயது 35), அவரது மனைவி சௌந்தர்ராஜா ஜெயபிரதா (வயது 30), மற்றும் இராசகுலசிங்கம் சசிப்பிரியா (வயது 17), இராசகுலசிங்கம் அருந்துஷா (வயது 15), இராசகுலசிங்கம் யதுஷா (வயது 11) ஆகியோர் கேப்பாபுலவில் நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவம் வீசிய செல் வீச்சில் அமிர்தலிங்கம் கண் முன்னே ஷெல் பட்டு துடித்துத் துடித்து இறந்து போனார்கள்.

இதனையடுத்து தனித்து வாழும் அமிர்தலிங்கம் அவரது இழப்பை ஈடுகட்ட முள்ளிவாய்க்காலில் அவரது வீட்டிற்கு எதிரே ரூபா 8 லட்சம் செலவில் பேருந்துத் தரிப்பிடம் ஒன்றை நிர்மாணித்துள்ளார்.

### தினச்செய்தி ரூபா 2.5 கோடியில் நினைவுத் தூபி

அதுமாத்திரமல்லாது பல தர்ம காரியங்களிலும் அவர் ஈடுபட்டு வருகின்றார். இறந்த சொந்தங்களுக்கு நினைவுத் தூபி அமைப்பதற்கு தன்னாலான சகல உதவிகளையும் தினச்செய்திக்கு வழங்குவதாக கூறினார். தினச்செய்தி ரூபா 2.5 கோடி செலவில் 60 அடி உயர நினைவுத் தூபி ஒன்று அமைப்பதாக சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தோம்.

### நினைவுத்தூபி வடிவமைப்பு

இந்த நினைவுத் தூபி வடிவம் ஒன்றை சென்ற இதழில் அமைத்து வெளியிட்டிருந்தோம். நாங்கள் வெளியிட்ட நினைவுத் தூபி ஒரு மாதிரி வடிவமேயாகும். உண்மையான வடிவமைப்பு அல்ல.

தினச்செய்தி வாசகர்களும், சொந்தங்களை இழந்தவர்களும் தமக்கு பிடித்த நினைவுத் தூபி வடிவத்தினை எமக்கு அனுப்பி வைத்தால் அவர்களின் வடிவமைப்புக்களையும் ஆராய்ந்து சிறந்ததொன்றை நாம் தெரிவு செய்வோம். இவ் வடிவமைப்பை ஜூன் 24, 2016க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

### 24 மணித்தியால அகல் விளக்கு

அதுமாத்திரமன்றி தினச்செய்தி இந்த நினைவுத் தூபியை 60 அடி உயரத்தில் அமைப்பதற்குத் திட்டமிட்டிருந்தோம். அத்துடன் 24 மணிநேரமும் சுடர் விட்டெரியும் அகல் விளக்கிற்கு தேவையான மின்சாரத்தை சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் மின்சாரத்திலிருந்து பெறுவதாக திட்டமிட்டுள்ளோம்.

### சர்வமத பிரார்த்தனை மண்டபம்

மேலும் சர்வமத பிரார்த்தனை மண்டபமும் அமைப்பதென்று குறிப்பிட்டிருந்தோம். அதுமாத்திர மன்றி அடுத்த ஜூன் மாதம் நடுப் பகுதியிலிருந்து முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி அமைப்பதற்கான காரியாலயம் அமைப்பதென்றும் அந்த காரியாலயத்திற்கு சொந்தங்களை இழந்தவர்கள் இழந்த சொந்தங்களின் விபரங்களை பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

பிரார்த்தனை முடிந்த பிற்பாடு ஆகக் குறைந்தது 100 பேருக்கு அன்னதானம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மண்டபத்தில் வருடம் 365 நாளும் பிரார்த்தனையும் அன்னதானமும் நடைபெறும். அடுத்த ஜூன் மாதம் நினைவுத் தூபி ஒன்றையும் அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## இராவணன் ஆண்ட...

இராவணன், இராமன் யுத்தத்திற்கு பின்னர் சீதை கற்புடைய பெண் தான் என்று நிரூபிப்பதற்கு நெருப்பு மூட்டி மூட்டப்பட்ட நெருப்பினுள் சீதை நுழைந்து கற்பைப் பறை சாற்றினார். அவ்வாறு நிரூபித்த பின் தான் இராமன் சீதையை ஏற்றுக் கொண்டார் என்று இராம காவியம் கூறுகின்றது.

இலங்கையில் சீதை அக்கினிப் பரீட்சை செய்து கற்பை நிரூபித்த இடத்தில் சீதைக்கான பிரமாண்டமான கோயில் ஒன்றை நிர்மாணிக்க வேண்டும் என்று மத்திய பிரதேச முதல்வர் தீர்மானித்திருந்தார். இவ்வாறான ஒரு கோயிலைக் கட்டுவதற்கு 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சாஞ்சிக்கு விஜயம் செய்த பொழுது எடுத்துக் கூறி அவரது ஆதரவையும் அனுமதியையும் கோரினார்.

அதையடுத்து சென்ற ஏப்ரல் மாத கடைசி வாரத்தில் மத்திய பிரதேச பிரதிநிதிகள் இலங்கைக்கு வந்து கோயில் சம்பந்தப்பட்ட விடயங்களைப் பற்றி இங்குள்ள அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை செய்துள்ளார்கள் என்று தெரிய வருகிறது.

இந்தக் கோயில் நிர்மாணம், வடிவமைப்பு என்பன பற்றியும், இக் கோயிலை யார் பராமரிப்பது என்ற விடயங்கள் வரை பேசப்பட்டதாகத் தெரிகின்றது.

சென்ற 16 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சாஞ்சிக்கு விஜயம் செய்த பொழுது மீண்டும் மத்திய பிரதேச முதலமைச்சர் இலங்கை ஜனாதிபதியுடன் இது சம்பந்தமாக பேச்சு நடத்தியிருப்பதாக தெரிய வருகிறது.

சீதை அக்கினிப் பரீட்சையை ‘டிவுறும்பொல’ என்ற இடத்தில் தான் செய்தார் என்றும், அங்கே தான் இக் கோயிலைக் கட்டுவது உகந்தது என்றும் இலங்கை அரசாங்கம் கருதுவதாக சொல்லப்படுகிறது. இந்த ‘டிவுறும்பொல’ என்ற பிரதேசம் நுவரெலியா வெலிமடை வீதியில் அமைந்துள்ள ‘சீத்தா எலியா’ என்ற இடத்திலிருந்து 15 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது.


இந்த ‘சீத்தா எலியா’ என்ற இடத்தில் தான் சீதையை இராவணன் சிறை வைத்தான் என்றும் அங்கு ஓடும் ஓடையில் தான் சீத்தா ஸ்நானம் செய்தார் என்றும் கூறப்படுகிறது.

இங்கே சீத்தை அம்மன் கோயில் என்ற பெயரில் சீதைக்கு கோயில் ஒன்று ஏற்கனவே அமைந்துள்ளது.

ஏற்கனவே இலங்கையை எரித்த ஹனுமானுக்கு பிரமாண்டமான சிலை ஒன்று மலையகத்தில் உள்ள றம்பொடையில் அமைக்கப்பட்டுள்ளது. சீத்தா கோயில் ஒன்றையும் அமைக்க இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது தெரிய வந்துள்ளது.

இராவணன் வாழ்ந்து திறம்பட ஆட்சி புரிந்த லங்கா புரியில் ஆரிய எச்சமாக சீத்தைக்கு கோயில் ஒன்றை அமைக்க இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கருணாநிதி வெற்றி



[சென்னை]

திமுக தலைவர் கருணாநிதி இதுவரை சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்டு தோற்றதே இல்லை என்ற சாதனையை தக்க வைத்துள்ளார்.திருவாரூர் தொகுதியில் அவர் 2 ஆவது முறையாகவும், சட்டசபைத் தேர்தலில் 13 ஆவது முறையாகவும் அவர் வெற்றி பெற்றுள்ளார்.கருணாநிதி பல சாதனைகளுக்குச் சொந்தக்காரர். அதில் ஒன்று 12 முறை சட்டசபைத் தேர்தல்களில் தொடர்ந்து வென்றது. தற்போது 13 ஆவது முறையாக தேர்தல் களம் கண்டுள்ள கருணாநிதி அதிலும் வென்றுள்ளார்.

திருவாரூரில் திமுக தலைவர் கருணாநிதி 67,212 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

அவர் பெற்ற மொத்த வாக்குகள் 1,21,196. அவரை எதிர்த்து அதிமுக சார்பில் பன்னீர்செல்வம் போட்டியிட்டார்.

1957 ஆம் ஆண்டு தனது முதல் தேர்தலை குளித்தலையில் சந்தித்தார் கருணாநிதி.அன்று முதல் அதன் பிறகு அவர் சந்தித்த ஒவ்வொரு தேர்தலிலும் அவர் வென்று வந்துள்ளார்.

1962 – தஞ்சாவூர், 1967 – சைதாப்பேட்டை, 1971 – சைதாப்பேட்டை, 1977 – அண்ணா நகர், 1980 – அண்ணா நகர் (1984ம் ஆண்டு நடந்த தேர்தலில் கருணாநிதி போட்டியிடவில்லை. அப்போது அவர் எம்.எல்.சி.யாக இருந்தார்) 1989 – துறைமுகம், 1991 – துறைமுகம், 1996 – சேப்பாக்கம், 2001 – சேப்பாக்கம், 2006 – சேப்பாக்கம், 2011– திருவாரூர், 2016 – திருவாரூர்

தமிழகத்தில் எந்தத் தலைவரும் இதுவரை இத்தனை முறை தேர்தலில் போட்டியிட்டு வென்றதில்லை. அந்த வரலாற்று சாதனையை இனி யாரேனும் படைப்பார்களா என்பதும் தெரியவில்லை. அந்த வகையில் கருணாநிதியின் இந்த வெற்றி மிகப் பெரிய சாதனையாகும். 13 தேர்தல்களில் வென்றுள்ள கருணாநிதி 5 முறை முதல்வராக இருந்தும் சாதனை படைத்தவர்.அவர் 6 ஆவது முறையாக முதல்வர் பதவியை ஏற்று வரலாறு படைப்பார் என்று திமுகவினர் எதிர்பார்த்தனர். ஆனால் அது ஏமாற்றத்தில் போய் முடிந்துள்ளது.

# கென்டகியில் ஹிலாரி வெற்றி

[வாஷிங்டன்]

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளரை தேர்ந்தெடுப்பதற்கான உட்கட்சி தேர்தலில், ஹிலாரி கிளின்டன் 50 சதவீத வாக்குகளுடன் கென்டகி மாகாணத்தை கைப்பற்றி உள்ளார். இதுபோல, இவரது சக போட்டியாளரான பெர்னி சாண்டர்ஸ் ஓரிகான் மாகாணத்தில் 53 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றுள் ளார். வரும் நவம்பர் 8–ம் திகதி புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைபெற உள்ளது. இந்நிலையில், மாகாண வாரியாக நடைபெற்று வரும் வேட்பாளர் தேர்தலில் ஜனநாயகக் கட்சியில் ஹிலாரியும் குடியரசு கட்சியில் டொனால்டு டிரம்பும் முன்னிலையில் இருந்து வருகின்றனர்.



# யாழ் இளவாலை பகுதியில் 10 கிலோ கேரளா கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வீடொன்றில் இருந்து 10 கிலோ கேரளா கஞ்சாமீட்கப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.ஆர் சேனநாயக்க தெரிவித்தார். இக்கஞ்சாவினை வீட்டில் உடமையாக வைத்திருந்ததாக 48 வயதுடைய விபுலானந்தா வீதியை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகலொன்றின் பிரகாரம் வீடொன்றினை சோதனையிட்ட போது கஞ்சாவுடன் நபர்ஒருவர் கைது செய்யப்பட்டார். கேரளா கஞ்சா மீட்கப்பட்ட வீட்டில் இருந்து விற்பனை செய்யப்பட்டு வந்ததாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர். 6 பார்சல்களாக பொதி செய்யப்பட்ட நிலையில் கேரளா மொழி பத்திரிகையினால் இக்கஞ்சா பக்கட்டுக்கள் சுற்றப்பட்டிருந்தன.

இத்தேடுதல் நடவடிக்கையானது சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் மாசிங்க மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மதவலஆகியோரது ஆலோசனையில் இடம்பெற்றுள்ளது. மீட்கப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி ரூபா 20 இலட்சத்திற்கு அதிகமானது என நம்பப்படுகின்றது.


## பிரணாப் முகர்ஜி சீனா விஜயம்

[புதுடில்லி]

சீன ஜனாதிபதி ஜின்பிங் விடுத்த அழைப்பை ஏற்று இந்தியப் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வரும் மே 24 முதல் 27 வரை சீனாவில் 4 நாட்கள் சுற்றுப் பயணம் செய்கிறார்.

மே 24–ல், இந்தியாவுடன் வலுவான தொழில் தொடர்புகளை கொண்டுள்ள சீனாவின் தொழில் நகரான குவாங்சூ செல்கிறார் பிரணாப். அங்கு இந்திய சமூகத்தினருடன் கலந்துரையாடும் அவர், இந்தியா சீனா வர்த்தக அமைப்பிலும் உரையாற்றுகிறார். அப்போது இந்தியாவின் முதலீட்டு வாய்ப்புகளை அவர் விளக்குகிறார். மாகாண உயரதிகாரிகள், இந்திய, சீன தொழிலதிபர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# கேரள மாநில முதல்வராகிறார் பினராயி




[கேரளா]

கேரள மாநில முதல்வராக இடதுசாரி எம்எல்ஏக்கள் கூட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் பினராயி விஜயன் தேர்வு செய்யப்பட்டார்.கேரள மாநில சட்டப்பேரவைக்கு நடந்து முடிந்த தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடதுசாரி ஜனநாயக முன்னணி 92 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது.இதையடுத்து இன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழுவினர் இன்று காலை கூடி ஆலோசனை நடத்தினர். இதில், கேரளாவில் இடதுசாரி கூட்டணி சார்பில் பினராயி விஜயன் முதல்வராக தேர்வு செய்யப்பட்டார்.

தான் முதல்வராக தேர்வு செய்ய ப்படுவோம் என்று எதிர்பார்த்திருந்த அச்சுதானந்தன் இதனால் அதிருப்தி அடைந்தார். எனவே, இடதுசாரி மாநிலக் குழு கூட்டத்தில் இருந்து பாதியில் வெளியேறினார்.முன்னதாக, தேர்தலில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி தோல்வி அடைந்ததை அடுத்து, முதல்வர் உம்மன் சாண்டி, தனது ராஜினாமா கடிதத்தை அம்மாநில ஆளுநர் சதாசிவத்திடம் இன்று காலை அளித்தார்

# எகிப்து விமானம் கடலில் விழுந்தது, தீவிரவாத தாக்குதலாக இருக்க வாய்ப்பு




[கெய்ரோ]

பாரீஸ் நகரில் இருந்து கெய்ரோவுக்கு புறப்பட்டு சென்ற எகிப்து விமானம், கடலில் விழுந்து நொறுங்கியது. அதில் பயணம் செய்த 66 பேரும் பலியாகி இருக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியிருக்க வாய்ப்பு என்று எகிப்து கூறிஉள்ளது. விமானம் மத்திய தரைக்கடல் பகுதியில் விழுந்தது என்று கூறப்படும் நிலையில் விமானத்தில் இருந்தவர்கள் யாரும் உயிர் பிழைத்தனரா? என்பது தொடர்பாக உறுதியான தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. விமானத்தின் சிதைவு பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது என்று முரண்பாடான தகவல்கள் வெளியாகிஉள்ளது. விமானத்தின் சிதைவு பாகங்கள் கார்பாதோஸ் தீவு பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது என்று எகிப்து வெளியுறவுத்துறை அமைச்சகம், எகிப்து விமான போக்குவரத்து அமைச்சகத்திற்கு தகவல் தெரிவித்து உள்ளது என்று எகிப்துஏர் அறிவித்து உள்ளது.

தென்கிழக்கு ஏஜியன் கடல்பகுதில் கிரேக்கத்தின் கார்பாதோஸ் தீவில் விமானத்தின் சிதைவு பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. இருப்பினும் இதுதொடர்பாக முரண்பாடு நீடித்து வருகிறது.விமானத்தின் சிதைவு பாகங்களை கண்டுபிடிப்பதிலும், விசாரணை நடத்துவதிலும் எகிப்திய விசாரணை குழு கிரேக்க விசாரணை குழுவுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. கிரீட்டில் இருந்து சுமார் 425 கிலோ மீற்றர் தொலைவில் கடல்பகுதியில் விமானத்தின் சிதைவு கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது என்று கிரேக்கத்தின் இஆர்டி செய்தி வெளியிட்டு உள்ளது. குறிப்பிடப்பட்ட பகுதியானது விமானம் கடைசியாக கட்டுப்பாட்டு அறையின் தொடர்பை இழந்ததில் இருந்து 100 நாட்டிகல் மைல் தொலைவில் உள்ளது. கிரீட்டில் இருந்து சுமார் 370 கிலோ மீட்டர் பரப்பளவில் நடத்தப்பட்ட தீவிர தேடுதல் பணியில் பிளாஸ்டிக் பொருட்களையும், இரண்டு உயிர்காக்கும் ஜாக்கெட்களையும் கிரேக்கத்தின் போர்க்கப்பல் கண்டுபிடித்து உள்ளது. இருப்பினும் கிரேக்கத்தின் விமான பாதுகாப்பு அதிகாரி கண்பிடிக்கப்பட்ட பொருட்கள் விபத்துக்குள் சிக்கிய விமானத்தின் பகுதி கிடையாது என்று கூறிஉள்ளார்.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி:-வடமாகாண ஆளுனரையும் நீதிபதி இளஞ்செழியனையும் வெளியேற்ற வேண்டும் என்று சிலர் போர்க் கொடி தூக்கியதன் காரணம் என்ன?**

**க.பிரமிளா கல்வியங்காடு**

பதில்:- எப்பவுமே நல்ல நோக்கமாக இருக்காது.

**கேள்வி:-முள்ளிவாய்க்காலை நினைவு கூர அரசாங்கம் அனுமதியளித்ததுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**சி.சிவச்சந்திரன் வவுனியா**

பதில்:- இது சம்பந்தமாக தினச்செய்தியில் ஏற்கனவே செய்தி வெளிவந்துள்ளது இறந்த நம் உறவுகளுக்காக தூபி அமைப்பதற்கு தினச்செய்தி முன்வந்துள்ளது உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை

**கேள்வி:- ஜெயலலிதாவின் கட்சியில் சேர்ந்த எனது அபிமான நடிகை நமிதா ஏன் தேர்தலில் போட்டியிட வில்லை?**

**எஸ். அச்சுதன் கரவெட்டி**

பதில்:- அவரது செல்வாக்கு அவ்வளவு தான்.

**கேள்வி:- சம்பூர் அனல் மின் நிலையத் திட்டம் கைவிடப் படுமா?**

**கே. மயூரன் வவுனியா**

பதில்:- அது ஒரு நல்ல விஷயம் இந்தியா அனல் மின் நிலையத்தை நிலக்கரி மூலப் பொருளில் இயக்குவதற்கு முடிவு செய்தது கும்பமேளாவிற்குச் சென்ற ஜனாதிபதி மைத்திரியின் வேண்டு கோளுக்கிணங்க இந்த மின் நிலையத்தை இயற்கை எரிவாயு மூலம் இயங்க வைக்க முடிவு செய்தது.

**கேள்வி:- தமிழகத் தேர்தலின் போது கோடிக்கணக்கான பணம் கைப் பற்றப்பட்டதின் மர்மம் என்ன?**

**ம. மகேஸ்வரன் உரும்பிராய்**

பதில்:- மர்மமான விஷயம் தான் கட்சிப் பணமா? அரசாங்கப் பணமா? என்பது விசாரணையின் பின் தான் உங்களுக்கும் எனக்கும் தெரிய வரும்.

**கேள்வி:- போர் வெற்றி விழா என்னாச்சு?**

**த.கபிலன் மன்னார்**

பதில்:- வெற்றி விழா கொண்டாடப் படவில்லை. மஹிந்தவுடன் அது போய்விட்டது. யாரை யார் வென்றார்கள், தமிழனையா? பிரபாகரனையா? இதற்கு யார் பதில் சொல் வது

**கேள்வி:- முஸ்லிம் காங்ரசுக்குள் என்ன நடக்கிறது?**

**த.சுந்தரம் இணுவில்**

முஸ்லிம் கட்சிகள் அல்லாஹு அக்பர்

**கேள்வி:- இங்கிலாந்து சென்ற இலங்கை கிரிகட் அணி வெற்றி பெறுமா?**

**ப.வெற்றிவேல் மாதகல்**

பதில்:- அவர்கள் குளிரில் நடுங்கு கிறார்கள்.

**கேள்வி:- காலநிலை ஏன் திடீர் என ஏன் இப்படி மாறியது?**

**கி.நிரஞ்சன், மானிப்பாய்**

பதில்:- நான் நினைக்கிறேன் வர்ணபக வானுக்கு அட்டமத்துச் சனி என்று.

**கேள்வி:- யாழில் உள்ள வாள் வீச்சு குழுவில் வெளிநாட்டவர் இருக்கிறார்களா?**

**ம.அனோஜன், முல்லைத்தீவு**

பதில்:- பொலிஸாரைத் தான் கேட்க வேண்டும்

**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**

*தில்லைகட்டிவீதி, சுன்னாகம்.*

## மலையகத்தில் பிரதான நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

(க.கிருஷாந்தன்)


மலையகத்தில் தொடர்ந்தும் பெய்து வரும் கடும் மழை காரணமாக பிரதான நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால் களனி ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் அதனை அண்டிய பிரதேசங்களை சேர்ந்த மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.லக்ஷபான நீர்தேக்கத்தில் 3 வான்கதவுகள் 15.05.2016 அன்று இரவிலிருந்து திறக்கப்பட்டுள்ளது. கெனியன் நீர்த்தேக்கத்தின் 2 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளது.

அத்தோடு விமலசுரேந்திர நீர்தேக்கத்தின் மேலதிக நீர் வெளியாகுவதோடு மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளது. மவுஸ்ஸாக்கலை மற்றும் காஸ்லரீ ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மஸ்கெலியாவில் மூன்று வீடுகள் சேதம்



(க.கிருஷாந்தன்)

மஸ்கெலியா - சாமிமலை ஸ்ட்ரஸ்பி சூரியகந்தை தோட்டத்தில் மண்சரிவு காரணமாக 18 குடும்பத்தைச் சேர்ந்த 96 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு பணியில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.சூரியகந்தை தோட்ட ஆறாம் இலக்க லயன் குடியிருப்பின் பின்புறத்தில் 13.05.2016 அன்று இரவு மண்சரிவு ஏற்பட்டுள்ளது. அத்தோடு 15.05.2016 அன்றும் தொடர்சியாக மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

மண்சரிவினால் மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. எனினும் உயிராபத்துகள் எதுவும் இல்லையெனவும், சில பொருட்கள் மட்டும் சேதமாகியுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.இதன்காரணமாக இக்குடிமிருப்பில் வசித்து வந்த 96 பேர் வெளியேற்றப்பட்டுள்ளதுடன் இவர்கள் தோட்ட சிறுவர் நிலையம், சிறுவர் முன்பள்ளி ஆகிய நிலையங்களில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் மழை காரணமாக இப்பகுதியில் பாரிய அனர்த்தம் ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக இராணுவத்தினர் குறித்த பகுதியில் கடமையில் ஈடுபட நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## லிந்துலையில் மண்சரிவு 7 குடும்பங்கள் இடம்பெயர்வு



(க.கிருஷாந்தன்)

லிந்துலை, சென்கூமஸ் லெமினியர் தோட்டத்தில் 18.05.2016 அன்று மாலை ஏற்பட்ட மண்சரிவு காரணமாக 7 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். மேற்படி 36 பேரும் கொழுந்து மடுவத்திலும் பொது இடங்கள் மற்றும் உறவினர்கள் வீட்டிகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.


2015ஆம் ஆண்டு பெய்த கடும் மழையினால் குடியிருப்பு பகுதியில் வெடிப்புகள் ஏற்பட்டதையடுத்து, நுவரெலியா மாவட்ட இயற்கை அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளால், மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டிருந்தனர். ஆனால், 05 மாதங்கள் கடந்த போதிலும் இவர்களுக்கான எவ்வித மாற்று நடவடிக்கைகளையும் தோட்ட நிர்வாகமும் அரசியல்வாதிகளும் செய்து கொடுக்கவில்லையென பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

# சொன்னார்கள் சொன்னார்கள்



இலங்கையில் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவிவரும் நிலையில் இதனூடாக தமிழர் பிரச் சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

ஈழத் தமிழர்கள் உலகம் முழுவதும் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் கலை கலாசாரத்தை அவர்கள் பாதுகாத்து வருகின்றனர். இந்தப் பின்னணியில் ஈழத் தமிழ் மக்களுக்கு சமத்துவம்கிடைக்கும் என்ற நம் பிக்கை உள்ளது என வாழும் கலை நிறு வனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீ ரவி சங்கர் குருஜி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.



நான் ஒரு சாதாரண மனிதன், என்னை நிலைநிறுத்திக் கொள்ள ஒவ்வொரு நாளும் போராடிக் கொண்டிருக்கிறேன்' என்று அமெரிக்காவின் குடியரசு கட்சி அதிபர் வேட்பாளரும் ரியல் எஸ்டேட் தொழிலதிபருமான டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.




போர் வெற்றி ஒருபுறம் மகிழ்ச்சியை கொடுத்தாலும் மறுபுறம் மரணங்கள் கவலையளிப்பதாகவே உள்ளது. கல், மண், சீமெந்தைக் கொண்டு தேசியநல்லிணக்கத்தை கட்டியெழுப்ப முடியாது. தமிழ் சிங்கள மக்களின் இதயங்களை இணைப்பதன் மூலமே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எமது அமைச்சரவைக்குள்ளேயே ஒருசிலர் இருந்து கொண்டு அரசாங்க மட்டத்தில் பேசப்படும் விடயங்களை முன்னாள் ஜனாதிபதிக்குவழங்கிக்கொண்டிருக்கின்றார். இது மாபெரும் துரோகமாகும். அந்த அமைச்சருக்கு விரைவில் என்ன நடக்கின்றது என்று பாருங்கள் என்றுஅமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித்த சேனாரட்ன தெரிவித்தார்.






சங்கம் வேறு நடிப்பு வேறு. சங்கம் வேறு தொழில்வேறு இரண்டையும் குழப்பிக் கொள்ளக் கூடாது. ராதாரவி அண்ணன் வந்தார் என்னைக் கட்டிப்பிடித்தார். இப்போது நிறைய தொடர்ச்சியாக படங்கள் நடிக்கிறேன். வீட்டில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நடிகர் சங்கத்துக்கு எந்த உதவிதேவைப்பட்டாலும் சொல்லுப்பா செய்றேன் என்றார். அவர் ஒரு மூத்த நடிகர். அவர் மரியாதைக்குரியவர் என்பதை என்றும் நான் மறந்ததில்லை.இவ்வாறு விஷால் கூறினார்.



சர்வதேச குற்ற விசாரணை நடத்துவதன் மூலமே உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையும்' என வடமாகாணமுதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.




சிங்கப்பூரின் பல்லின மக்களுக்கு இடையிலான புரிந்துணர்வும் நம்பிக்கையுமே நாட்டின் இன, சமய நல்லிணக்கத்திற்குக் காரணம் என்று பிரதமர் லீ சியன் லூங் தெரிவித்துள்ளார். "இதை ஒருபோதும் தீர்வு எட்டப்பட்ட பிரச்சி னையாகக் கருதக்கூடாது என்பதால் இன, சமய நல்லிணக்கத்திற்காக நாம் எப்போதும் தொடர்ந்து பாடுபட வேண்டும்," என்றும் லீ கூறியுள்ளார்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினரை விடுதலை செய்ய இந்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். அவர்களுக்கு எதிராக போலியான குற்றச்சாட்டுகளை சுமத்துவதை கைவிட வேண்டும் என்றும் மஹிந்த ராஜபக்ச வெளியிட்டுள்ளதனது அறிக்கையில் கூறியுள்ளார்.



## அங்கும் இங்கும்



# பீஸாவின் பெட்டியையும் சுவைத்து உண்ணலாம்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரிலுள்ள பீஸா நிலையமொன்று பீஸா வைக்கப்பட்டுள்ள பெட்டியையும் உண் ணப்படக்கூடியதாக தயாரிக்கிறது.

உணவு கொண்டுள்ள கோப்பையையும் சேர்த்து உண்ணப்படக்கூடியதாக தயாரிக்கப்பட்ட உணவே பீஸா என்பார்கள்.

ஆனால், நியூயோர்க் புரூக்ளின் பகுதியிலுள்ள "வின்னீஸ் பீட்ஸேரியா" எனும் பீட்ஸா தயாரிப்பு நிறுவனமானது பீட்ஸா பெட்டியையும் 100 சதவீதம் உண்ணப்படக்கூடியதாக தயாரித்துள்ளது. பீஸாவை பொதி செய்வதால் ஏற்படும் வீண் விரயத்தை தவிர்க்கும் நோக்குடன் இந் நிறுவனத்தின் உரிமையாளர் சீன் பேர்தியம் இத் திட்டத்தை ஆரம்பித்தாராம்.இந்தப் பெட்டியை நீங்கள் எறிந் துவிட வேண்டியதில்லை. அதையும் உண்ணலாம் என்கிறார் சீன்.

# சூப்பர் ஸ்டார்

# ரஜினிகாந்த்

ரஜினிகாந்த் என்று அனைவராலும் அறியப்படும் சிவாஜி ராவ் கைக்வாட், ஒரு புகழ்பெற்ற தமிழ்த் திரைப்பட நடிகராவார்.

ரஜினிகாந்த், டிசம்பர் 12 1950 அன்று இந்தியாவின் கர்நாடகத்தில் ராமோசி ராவ் காயக்வாடுக்கும் ரமாபாய்க்கும் நான்காவது குழந்தையாகப் பிறந்தார். அவருக்கு ஐந்து வயதான போது தன் தாயை இழந்தார். பெங்களூரில் உள்ள ஆசாரிய பாடசாலை, மற்றும் விவேகானந்த பாலக சங்கம் ஆகியவற்றில் கல்வி கற்றார். படித்து முடித்தவுடன் பெங்களூரில் பல்வேறு இடங்களில் பணிபுரிந்தார். திரையுலகில் தனது வாழ்க்கையை தொடங்குவதற்கு முன்பு , அவர் மேடை நாடகங்களில் கலந்து கொண்டார்.

அவர் தனது வீட்டின் அருகே ராமர் அனுமன் கோவிலில் சண்டை பயிற்சி செய்வார். பின்னர் அவர் பெங்களூர் மாநகர போக்குவரத்து கழகத்தில் ஒரு பேருந்து நடத்துனராக வேலை செய்தார். இந்த காலகட்டத்தில் பல மேடை நாடகங்களில் பங்கு கொண்ட ரசினிகாந்தின் மனதில் நடிக்கும் ஆவல் வளர்ந்தது. நடிகராகும் ஆவலுடன் சென்னை வந்த ரஜினிகாந்து, ஒரு நண்பரின் உதவியுடன் சென்னை திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து பயின்றார்.1975 ஆம் ஆண்டு கே. பாலச்சந்தர் இயக்கிய அபூர்வ ராகங்கள் திரைப்படத்தில் ஒரு சிறிய வேடத்தில் புற்று நோயாளி என்ற க்தாபாத்திரங்களில் நடித்தார் அப்போது அவருக்கு ரஜினிகாந்த் என பாலசந்தர் பெயர் சூட்டினார். நண்பனின் காதலியை அடைய நினைக்கும் பெண்ணாசை




பிடித்தவராக அவர் நடித்தமூன்று முடிச்சு (1976) அவரை ஒரு சிறந்த நடிகராக அடையாளம் காட்டியது. அதன் பிறகு 16 வயதினிலே, காயத்ரி போன்ற படங்களில் வில்லனாகநடித்தார்.

பின்னர் புவனா ஒரு கேள்விக்குறி, முள்ளும் மலரும், ஆறிலிருந்து அறுபது வரை போன்ற திரைப்படங்களில் நல்லவனாக நடிக்கத் தொடங்கினார். பில்லா, போக்கிரி ராசா, முரட்டுக் காளை போன்ற திரைப்படங்கள் அவரை ஒரு அதிரடி நாயகனாக ஆக்கியது. தில்லு முல்லுதிரைப்படத்தின் மூலம் தான் ஒரு நல்ல நகைச்சுவை நடிகர் என்பதை ரஜினிகாந்து நிரூபித்தார்.ரஜினிகாந்து நடித்த திரைப்படங்களில் மிகவும் வித்தியாசமானது அவருடைய நூறாவது படமான ஶ்ரீ ராகவேந்திரா. இப்படம் இந்து சமயப் புனிதரான ஶ்ரீ ராகவேந்திர சுவாமிகள் என்ற மகானின் வாழ்க்கை பற்றியது.

1980களில் ரஜினிகாந்து நடித்து வெளிவந்த வேலைக்காரன், மனிதன், தர்மத்தின் தலைவன் போன்றவை பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்ததாக இருந்தன.1990களில் இவர் நாயகனாக நடித்த அண்ணாமலை, பாட்ஷா, படையப்பா போன்ற திரைப்படங்கள் மாபெரும் வெற்றி பெற்றன. 2002 ஆம் ஆண்டு வெளிவந்த பாபா (திரைப்படம்) சில இடங்களில் வெற்றி பெறவில்லை. எனினும், அவர் நடித்து 2005ஆம் ஆண்டு வெளிவந்த சந்திரமுகிக்கும்2007 ஆம் ஆண்டு வெளி வந்த சிவாஜிக்கும் நல்ல வரவேற்பு கிடைத்தது. 2010ஆம் ஆண்டு வெளியாகிய எந்திரன் படம் பெரு வெற்றியைப் பெற்றது.

ரஜினிகாந்தின் படங்கள் அதிரடியும், நகைச்சுவையும் நிறைந்த பொழுதுபோக்குத் திரைப்படங்களாக உள்ளன. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ரசித்துப் பார்ப்பதாக இருக்கும். தமிழ் மொழியிலும், தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாளம், வங்காள மொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் 159 திரைப்படங்களில் ரஜினிகாந்து நடித்துள்ளார். ரஜினிகாந்த் முதல் முறையாக திரைக்கதை எழுதி பாக்ஸ் ஆபிஸில் தோல்வியடைந்த படம் வள்ளி (1993).

இவருடைய ரசிகர்கள் இவரை தலைவர் என்றும் மக்கள் அனைவரும் சூப்பர் ஸ்டார் என்றும் அழைக்கின்றனர். ஆசியாவில் நடிகர் ஜாக்கி சான்– னுக்குஅடுத்தபடியாக அதிக அளவில் சம்பளம் வாங்கும் நடிகர் இவர்.ஸ 2016ஆம் ஆண்டு நாட்டின் உயரிய குடிமை விருதுகளில் இரண்டாவதான பத்மவிபூசண் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டார்.அவரது தாய்மொழி மராத்தி என்றாலும், அவர் இன்னும் எந்த மராத்தி படங்களிலும் நடிக்கவில்லை.



இந்திய நடிகர்களுள் சினிமாவில் நான்கு வெவ்வேறு வடிவங்களில் தோன்றிய முதல் நடிகர் ரஜினிகாந்த். கருப்பு மற்றும் வெள்ளை, நிறம் , 3D மற்றும் மோஷன் கேப்சர் கலந்த ஒரே படம் கோச்சடையான்.

16 பிப்ரவரி 1981 அன்று இவர் லதாவை மணந்தார். ஐஸ்வர்யா, சௌந்தர்யா ஆகியோர் இரு மகள்கள் ஆவார். இவருடைய மூத்த மகள் ஐஸ்வர்யா ,2004 ஆம் ஆண்டு தமிழ் திரைப்பட நடிகரான தனுசை மணந்தார். செப்டம்பர் மூன்றாம் தேதி 2010 ஆம் ஆண்டு அன்று சௌந்தர்யா, அஸ்வின் ராம்குமார் என்ற தொழிலதிபரை மணந்தார்.

ரஜினிகாந்த் இந்திய சினிமாவில் மிக செல்வாக்கு மிக்க திரைப்பட நட்சத்திரங்களில் ஒருவராவார்.அவர், இந்திய சினிமாவின் தனது பங்களிப்பை இந்தியாவின் மூன்றாவது மிக உயர்ந்த விருதான பத்ம பூஷண், பெற்றார் . நடிப்பு தவிர, ரஜினிகாந்த் திரைக்கதை ஆசிரியராகவும் , படத்தின் தயாரிப்பாளர் மற்றும் பின்னணி பாடகராகவும் பணியாற்றினார். ரஜினிகாந்தின் திரைப்படங்களுக்கு தமிழகத்தில் மாபெரும் வரவேற்பு கிடைக்கிறது. அவருடைய திரைப்படங்கள் தயாரிப்பாளர்களுக்கும்,வெளியீட்டாளர்களுக்கும் நல்ல லாபத்தை ஈட்டிக் கொடுக்கிறது. ரஜினிகாந்துக்கு தமிழகத்தில் பல்லாயிரக்கணக்கான ரசிகர் மன்றங்கள் உள்ளன. இது தவிர அவருக்கு ஜப்பானிலும் பல ரசிகர்கள் உள்ளனர்.

1990களில் ரஜினிகாந்து நடித்த சில திரைப்படங்களின் வசனங்களிலும் பாடல்களிலும் அரசியல் நெடி சற்று இருந்தது. 1996 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலின் போது அப்போது ஆளும் கட்சியாக இருந்த அ.இ.அ.தி.மு.க கட்சிக்கு எதிராக இவர் தொலைக்காட்சியிலும் பத்திரிகைகளிலும் கருத்து கூறியது அக்கட்சி தோற்றதன் காரணங்களுள் ஒன்றாக பரவலாகக் கூறப்படுகிறது. அடுத்தடுத்த தேர்தல்களில், ரசினிகாந்து எக்கட்சிக்கும் வாக்களியுங்கள் என்றோ வாக்களிக்க வேண்டாம் என்றோ வெளிப்படையாகவும் திட்டவட்டமாகவும் தன் ரசிகர்களையோ பொது மக்களையோ கேட்டுக்கொள்ளவில்லை.2004 இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க தலைமையிலான கூட்டணிக்கு தான் வாக்களித்ததாக வெளிப்படையாக அறிவித்தார்.

ப.ரஞ்சித்தின் இயக்கத்தில் கபாலி படம் முடிந்து விட்டது. எந்திரன் 2 இல் நடித்துக்கொண்டிருக்கிறார்.ரஜினியின் பஞ்ச் தந்திரம் என்ற தலைப்பில் இவரது படங்களில் உள்ள 30 முத்திரை வசனங்கள் மூலம் மேலாண்மை தத்துவங்களை எடுத்துக்கூறும் புத்தகம்.[4] இப்புத்தகம் ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

பாஷாட்சாவும் நானும் எனும் நூலில் ரஜினியை சந்தித்தது முதல் ரஜினியுடனான சம்பவங்களை இயக்குனர் சுரேஷ் கிருஷ்ணா எழுதியுள்ளார்.

ரஜினி இதில் அபூர்வராகங்கள் முதல் எந்திரன் வரையான ரஜினியின் திரைப்பட விமர்சனங்கள் பைம்பொழில் மீரான் என்பவரால் எழுதப்பெற்றுள்ளன

# மீனம்பாக்கம் விமான நிலைய குண்டுவெடிப்பு

அமெரிக்காவை சேர்ந்த அலன் தம்பதியினரின் கடத்தல் இலங்கை தரப்பின் கையை ஓங்க வைத்தது. அக்ஸ்போட் பல்கலைகழகத்தில் கல்வி கற்று பட்டம்பெற்று தேசிய பாதுகாப்பு அமைச்சராகப் பதவியேற்ற லலித் அத்துலத்முதலி மிகக் குறுகிய காலத்தில் இந்திய தலைவர்களுடன் தொடர்பும் உறவும் ஏற்படுத்திக்கொண்டார்.

"அலன் தம்பதியினர் கடத்தலும் விடுதலையும் வெளிக்காட்டுவது என்ன வென்றால் தமிழப் பயங்கரவாத கோஷ்டிகள் இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்பது வெட்டவெளிச்சமாகத் தெரியவருகின்றது. இது சம்மந்தமாக முன்பு ஏதாவது சந்தேகம் இருந்தால் அந்த அலன் தம்பதியினர் கடத்திய நாடகத்திற்கு பின்னர் இவ்வாறான குழப்பங்களுக்கு சந்தேகத்திற்கும் இடமேஇல்லை" என்று முழங்கினார்.

அதே போலவே இலங்கையின்பிரதம மந்திரி பிரேமதாசாவும் இந்திய அரசாங்கத்தையே தொடர்ந்தும் தாக்கிக் கொண்டே இருந்தார். இந்தியா தான் பயங்கரவாதிகளுக்கு ஆயுதம் வழங்குவது, பயிற்சி அளிப்பது பாதுகாப்பு வழங்குவது நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கான வேலைகளை எல்லாம் செய்துவருகின்றது என்றெல்லாம் குற்றம் சுமத்தினார் ஆனால் இந்திய அரசாங்கமோ கிளிப் பிள்ளைக்கு சொன்னதை போல இந்தக் குற்றத்தை மறுத்துக் கொண்டே வந்தது.

"தமிழ் நாட்டு அரசாங்கத்தைத் பொறுத்தமட்டில் உடல் பயிற்சி செய்வதற்குக் அரசியல் கட்சிகள் ஒழுங்கு செய்தால் கூட அனுமதி அளிப்பதில்லை" என்று தமிழ் நாட்டின் முதல்வர் எம். ஜி ராமசந்திரன் கேலியாகக் கூறினார். ஆனால் பிரேமதாசா தொடர்ந்தும் இந்திய அரசாங்கத்தினை குறை கூறிக்கொண்டே இருந்தார். "பிரிவினைக்காக போராடும் பஞ்சாப் தேசத்து சீக்கையரை இந்தியா தேசத் துரோகிகள் என்று குற்றம் சுமத்தியது. ஆனால் இலங்கைத் தமிழ் பயங்கரவாதிகள் எமது தாய்நாடான ஸ்ரீ லங்காவுக்கு எதிராக இந்தியாவில் இருந்து யுத்தம் தொடுத்து போராடுபவர்களை இவர்களை விடுதலைப் போராட்ட வீரர்கள் என்று தூக்கி வைத்துப் பாராட்டுகின்றார் அவர் பொது கூட்டத்தில் பேசும்போது கூறினார். இருந்த போதிலும் இந்தியாவிற்கு நன்கு தெரியும் இவர்கள் கொலை, கொள்ளை ஆட்கடத்தல்களில் ஈடுபடும் கொள்ளையர்கள் இந்தியா சென்று இந்த கைங்கரியங்களில் ஈடுபடுகின்றார்கள் என்ற விடயம்"

அதே நேரத்தில் 1987ம் ஆண்டின் நடுப்பகுதியில, இலங்கையில் தழிழர் செறிந்து வாழும் யாழ் குடாநாட்டில் நிலைமை கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டே இருந்தது. எல்.ரி.ரி.ஈ, ரெலோ, புளொட் , ஈ.பி.ஆ.எல்.எப் மற்றும் ஈரோஸ் போன்ற குழக்கள் அவர்கள் அந்த பகுதியில் இயங்குவதை தங்கள் செயற்பாட்டினால் பறைசாற்றி கொண்டிருந்தார்கள். இருந்த போதும் எல்.ரி.ரி.ஈயினர் தான் அரசுக்கு எதிராக செயற்பாடுகளை துரிதமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அந்த காலத்தில் ஜெயவார்த்தனாவின் தலைமையில் உள்ள இலங்கை அரசாங்கத்திற்கும் தழிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்குமான பேச்சு வார்த்தைகள் எந்தவித முன்னேற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. இந்த பேச்சுவார்த்தை ஒரு பயனற்ற செயற்பாடாக இருந்தது.



சமாதானப் பேச்சு வார்த்தை எந்த விதமான பயனையும் வழங்க முன் வரவில்லை. இதனை அடுத்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் ஒத்துழையாமை செயற்பாட்டில் ஈடுபடப்போவதாகப் பயமுறுத்தினார். இந்த அச்சுறுத்தல் பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவார்த்தனா தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணி வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதன் செல்வாக்கை இழந்துவிட்டது என்றும் தமிழ்ப் போராளிகளை கட்டுப்படுத்தும் வல்லமை அவர்களிடம் இல்லை என்றும் கிண்டலுடன் கேலியுடனும் அறிவித்தார். "தான் ஒரு சூழ் நிலைக் கைதி" என்றும் ஜனாதிபதி ஜெயவார்த்தனா அறிவித்தார். அதிகாரங்தளைப் பரவலாக்கும் திட்டத்திற்கு தன்னுடைய கட்சியை தன்னால் ஈடுபடுத்த முடியாது என்றும் கூறினார். அதே நேரத்தில் தமிழருக்கு சுய ஆதிக்கம் கொடுப்பதாகப் கூறிய அவரே எதிராக நடக்கிறார் என்று தகவல் தெரிந்த வட்டாரங்கள் குற்றம் சுமத்தின.

இது சம்மந்தமாக யூன் 24ம் திகதி 1984ம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தழிழ் ஐக்கிய விடுதலை முன்னணி சம்மந்தமாக ஜெயவார்த்தனா வெளியிட்ட குற்றச்சாட்டினை அவர்களும் எதிரொலித்தனர். "எங்களை ஒதுக்கி வைத்துவிட்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் பேச்சு நடத்தி எத்தவித பயனும் இல்லை இவ்வாறு பேச்சு வார்தை நடத்தினால் எதிர்ப்புப் போராட்டம் தொடரும் என்றும் எங்களுடைய எண்ணப்படி பேச்சு வார்தை முடிவுகள் அமைந்து இருக்க வேண்டும்" என்றும் தழிழீழ விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். அதே தினம் ஈரோஸ் இயக்கம் கொழும்பில் உள்ள லங்கா ஒபெய்ரோ ஹோட்டேலுக்கு குண்டு வைத்து வெடிக்க செய்துள்ளார்கள். ஹோட்டேலில் 8வது மாடியின் வதிவிடத்தை குண்டு வெடிப்பு பயங்கர சேதம் விளைந்தது. அதே மாடிக்கு கீழ்தான் இலங்கை அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்க வந்த இஸ்ரேலிய நாட்டைச் சேர்ந்த இருவர் தங்கியிருந்தனர். அதை அடுத்து, இலங்கை ஜனாதிபதி அவசர அவசரமாக நிலமைகளை சீர் செய்வதற்கு புதுடில்லி பயணமானார். ஆனால் புதுடில்லியில் உள்ள தலைவர் ஜெயவார்த்தனாவின் இந்த வரவுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

அதே சமயம் கறுப்பு யூலையின் முதலாண்டு நிறைவை அறிவிக்கும் முகமாக, அன்றைய தினத்தை துக்க தினமாக அனுஸ்டிப்பதற்கு அமிர்தலிங்கம் அறிவித்தார். யூலை 25ம் திகதியை துக்க தினமாக அறிவித்து சத்தியாக்கிரஹம் செய்ய முன்வந்தார்கள். அந்த அறிவிப்பை அடுத்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினர் யாழ் சென்று உண்ணா விரத நோன்பு நடத்த முன்வந்தனர் அந்த உண்ணா விரத நோன்புக்கு சுமார் 200பேர் கூட நோன்பு நோக்க முன்வரவில்லை. அதே சமயம் சுமார் 500க்கு மேற்பட்ட இளைஞர்கள் உண்ணா நோன்பு இருந்த அமிர்தலிங்கம் மற்றும் கோஷ்டிகளை சுற்றி நின்று கூச்சலும் கேலியும் செய்துகொண்டார்கள். அரசியல் வாதிகளை அவர்கள் திட்டினார்கள் உண்ணாவிரதப் போராட்டம் போராளிகளின் கைக்கு மாறியது.

உண்ணாவிரதத்தில் இருந்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் படிப்படியாக வெளியேறினார்கள். இறுதியில் தொண்டர்களும் இல்லை தலைவர்கள் மாத்திரம் தான் உண்ணாவிரதத்தில் இருந்தார். அந்த உண்ணாவிரதம் முடிவதற்கு 2 மணி நேரத்திற்கு முன்பு, அந்த சுற்றாடலை அதிர வைக்கும் விதத்தில் குண்டு வெடித்தது. அந்த வெடிப்போடு உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது. அதே நேரத்தில் போராளிக் குழுக்கள் தமிழ் பகுதியில் 83ம் ஆண்டு கறுப்பு யூலையை நினைவு கூர்ந்து நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது தமிழ்ப் பகுதியான யாழ்ப்பாணம் கிளிநொச்சி மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்பட்டன ஆனால் பல தமிழர்கள் வாழும் வவுனியா திருகோணமலையில் இயல்பு வாழ்கை சிறிதளவு பாதிக்கப்பட்டது. அந்தத் காலத்தில் 90 வீதமான தழிழர்கள் தங்களை தான் ஆதரிக்கிறார்கள் என்று தழிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் அமிர்தலிங்கம் பகிரங்கரமாகக் கூறினார்.

ஆனால் பிரபாகரன் வழங்கிய முதல் பத்திரிகைச் செவ்வியில், தமிழ் இயக்கத்திலுள்ளவர்கள் அனைவரும் "தேசத் துரோகிகள்" அவர்கள் சந்தர்ப்பவாதிகள் சயலாமத்திற்கனக அரசியலில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றம் சுமத்தினார். அதைக் கேட்ட அமிர்தலிங்கம் வாய்யடைத்துப்போய் மௌனமானார்.

சத்தியாக்கிரஹப்போராட்டம் தோல்வியடைந்ததை அடுத்து பத்திரிகையாளருக்கு பேசும் போது அன்ரன் பாலசிங்கம் குறிப்டுகையில் "இந்தியா தவறான குதிரை மேலே பணத்தை கட்டுகிறது, ஆனால் அவர்கள் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி யாழ் மக்கள் ஆதரவை எப்போதோ இழந்துவிட்டார்கள்". எது எப்படி இருந்தாலும் சத்தியாக் கிரஹம் தோல்வியடைந்த பிற்பாடு எக் காலத்திலும், தழிழ் மக்கள் தங்களுக்கு மட்டுமே ஆதரவாக இருக்கிறார்கள் என்று தழிழர் ஐக்கிய விடுதலை முன்னணியால் சொல்ல முடியாமல் போய்விட்டது. தழிழ் நாட்டில் அமிர்தலிங்கத்திற்கு அரச பாதுகாப்பு வழங்கப்பட்டது. அரசினர் விருந்தினர் மாளிகையில் தங்கவைக்கப்பட்டார். ஆனால் படிப்படியாக மாற்றம் ஏற்படத்தொடங்கியது. எல்லாப் போராட்ட குழுக்களும் அலுவலகங்களையும் தகவல் நிலயங்களையும் ஆரம்பித்தன. சென்னை மதுரை தொடக்கம் தழிழ் நாட்டின் கரையோரங்களில் போராட்டக் குழு முகாம்கள் அமைத்து இருந்தார்கள். அதே நேரம் "றோ" என்று அழைக்கப்படும் ஆய்வு பகுப்பாய்வுப் பிரிவு, எல்லாப் போராளி குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி வந்தது. அந்தக் காலத்தில் தழிழீழ விடுதலைப் புலிகள், யாழ்ப்பாணத்தில் தீவிரமாக இயங்கிவந்தார்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எம். ஜி ராமசந்திரன் ஆகிய இருவரும் நட்பிற்கு பாத்திரமாக இருந்தார்கள். டிசம்பர் 1987ம் ஆண்டு தமிழக முதல்வர் எம்.ஜி ராமசந்திரன் காலமாகும் வரை பிரபாகரன் அவருடன் நட்பாக பழகிவந்தார்

அதே சமயம் 1984ம் ஆண்டு தமிழீழ இராணுவம் என்று அழைக்கப்படும் அமைப்பு மீனம்பாக்க விமான நிலையத்தில் இருந்து கொழுப்பு செல்ல இருந்த விமானத்திற்கு குண்டு வைத்தார்கள் அந்த குண்டு வெடித்ததில் விமான நிலையத்தில் இருந்த "வருகை" பகுதி பலத்த சேதம் அடைந்தது.

[தொடர்ச்சி 19 இல்]

# உண்மை வெளிவருகிறது

## பகுதி - 13

மார்ச் மாதம் 24 ஆம் திகதி 1990 ஆம் ஆண்டு இந்தியப் படைகள் இலங்கையில் இருந்து வெளியேறிய பின்னர் வடக்கு கிழக்கு மாகாணசபை ஈ.பி.ஆர்.எல். எவ் தலைவர்கள் இந்தியாவுக்கு தப்பி யோடினார்கள்.

தப்பிப்பிழைத்த ஈ.பி.ஆர்.எல்.எவ் தலை வர்கள் பயங்கரமான மண்டையன் குழுத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனை தமது புதிய செயலாளர் நாயகமாக நியமித்தார்கள். தி.மு.க தலைவர் மு.கருணாநிதியின் கீழுள்ள தமிழ்நாடு அரசு விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியது என்றும் கொலையாளிகள் கைதாவதை தடுத்தது என்றும் குற்றம் சுமத்தப்படுகிறது. கருணாநிதி முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

ஜூன் மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாண கோட்டையிலுள்ள இராணுவ முகாம் எல்.ரி.ரி.ஈ இன் தாக்குதலுக்கு உள்ளானது. இந்தக் கோட்டை டச்சுக்காரர்களினால் கட்டப்பட்டதுஅந்நிய ஆதிக்கத்தின் சின்னமாக இருந்தது. இந்தக் கோட்டை யாழ்ப்பாணக் குடாநாட்டை மண்டைதீவு, ஊர்காவற்றுறை ஆகிய தீவுகளுடன் இணைக்கும் பண்ணைப்பாலத்திற்கு அண்மித்தாக யாழ்ப்பாண வடக்கு கரையோரத்தில் அமைத்திருந்தது.

கோட்டையில் நிறுத்தப்பட்டிருந்த துருப்புகள் சிவிலியன் இலக்குகள் மீது மோட்டர்க்குண்டுத் தாக்குதல்களையும் பீரங்கித் தாக்குதல்களையும் நடத்து வார்கள். சற்றுத் தூரத்தில் இருந்த யாழ்ப்பாண மருத்துவமனையும் அடிக்கடி தாக்குதலுக்கு உள்ளாகும். எல்.ரி. ரி.ஈ யாழ்ப்பாண கோட்டை மீதான தாக்குதல்கள் பல வாரங்கள் தொடர்ந்தன. எல்.ரி.ரி.ஈ போராளிகள் கோட்டையின் பிரதான நுளைவாயிலை தகர்த்தார்கள் கொத்தளத்தில் ஏற கவச வாளி சீவுளிகள் மற்றும் ஏணிகளைப்பயன்படுத்தினார்கள். துருப்புகளும் பொலிஸாரும் திருப்பித்தாக்குதல் நடத்தினார்கள். விமானப்படை புலிகள் மற்றும் சிவிலியன்களுக்கு உயிரிழப்புகளை ஏற்படுத்தியது. முற்றுகையை உடைத்தெறிய, மசெட்டி குண்டுவீச்சு போர்விமானங்கள், சிவிலியன் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் கோட்டையைச் சூழவுள்ள பகுதிகளை துவம்சம் செய்யப் பயன்படுத்தப்பட்டன.

ஜுலை 12 ஆம் திகதி, டென்ஸில் கொப்பேகடுவவின் கட்டளைத்தலைமையின் கீழ் வடக்கில் இலங்கை ஆயுதப்படையினர் ஒபரேஷன் திரிவிட பலய இராணுவத் தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்தனர். ஊர்காவற்றுறை மற்றும் மண்டைதீவு ஆகிய தீவுகளைக் கைப்பற்றியதன் மூலம் காரைநகர் கடற்படைத்தளத்தைப் பலப்படுத்துவதில் இது வெற்றிகண்டனர். யாழ்ப்பாணம் கோட்டைப் பொறிக்குள் சிக்கிய துருப்பினர் போதிய உணவு, வெடிபொருள் - தளபாடங்கள் மற்றும் உரிய வைத்திய சிகிச்சை இன்றி அவதிப்பட்டார்கள். ஒபரேஷன் ஈகிள் என்ற குறியீட்டுப் பெயர்கொண்ட துணிகர இராணுவ நடவடிக்கையின் மூலம் சிறு படையணிப்பிரிவின் லசந்த வைத்தியரத்ன பெரும் பிரயத்தனங்களின் பின்னர் இறந்த மற்றும் காயமுற்ற படையினரை ஒருவாறு அப்புறப்படுத்தினார்.

அதைத்தொடர்ந்து, மேலும் இரண்டு தொகுதி பட்டாளங்கள் மற்றும் விசேட ஆயுதப்படையணி சிக்கி இருந்த துருப்பினரை அப்புறப்படுத்தும் பணியில் இணைந்தன. நூற்றுக்கும் அதிகமான பொலிஸார் மற்றும் 210 படையணியினர்களை அவர்கள் மீட்டார்கள். அத்துடன், பெறுமதிமிக்க இராணுவத் தளவாடங்கள், எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட சுமார் 1,000 ஆயுதங்கள், 600,000 ரவுண்ட் வெடிபொருட்கள், அரசாங்க வங்கிளுக்குரிய ரொக்கப்பணம் மற்றும் தங்கங்கள் ஆகியவற்றையும் அவர்கள் பாதுகாத்து எடுத்துச்சென்றார்கள்.




எல்.ரி.ரி.ஈ யினருக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஆரம்பமான குரோதம் ஆரம்பமாகி மூன்று மாத காலத்தில் எல்.ரி.ரி.ஈ யினரின் தாக்குதல்கள் காரணமாக 667 பொலிஸார் கொல்லப்பட்டார்கள்ளு 352 பேர் காணாமல் போனார்கள். 1,154 பேர் காயமுற்றார்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ரணதுங்க அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி தெரிவித்தார். அத்துடன் நான்கு கடற்படையினர் மற்றும் ஆறு விமானப்படையினர் கொல்லப்பட்டார்கள். 32 கடற்படையினர் மற்றும் 24 விமானப்படையினர் காயமுற்றார்கள்.

எல்.ரி.ரி.ஈ யினரின் இழப்புகள் பற்றி கூறுகையில், 1,459 எல்.ரி.ரி.ஈ யினர் கொல்லப்பட்டார்கள். மற்றும் 382 பேர் காயமுற்றார்கள் என அவர் தெரிவித்தார். உளவு வட்டாரங்களின் தகவல்களின்படி, 2,500 எல்.ரி.ரி.ஈ யினர் கொல்லப்பட்டார்கள்.

ஜனவரி மாதம் முதலாம் திகதி 1991 ஆம் ஆண்டு, எல்.ரி.ரி.ஈ யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு முன்வந்தது. ஆயினும் எல்.ரி.ரி.ஈ அதன் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் முன்நிபந்தனை விதித்தது. எல்.ரி.ரி.ஈ முன்நிபந்தனையை நிராகரித்து, யுத்தத்தைத் தொடர்ந்தது.

1990 ஆம் ஆண்டு நவம்பர் நடுப்பகுதியில், இலங்கை இராணுவம் மன்னார் தீவிலிருந்து புலிகளை களைந்தெடுத்தது. மன்னார் நகரத்தில் சிவில் நிர்வாகம் திரும்பக் கொண்டுவரப்பட்டது. தீவை இணைக்கும் பிரதான பாலம் மோட்டார் வாகனப் போக்குவரத்துக்கு வசதியாக சீரமைக்கப்பட்டது. மன்னாரில் இருந்து எல்.ரி.ரி.ஈயினர் வேரோடு களையப்பட்டனர்.1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி, 400 எல்.ரி.ரி.ஈ யினரை உள்ளடக்கிய குழு ஒன்று மன்னாரில் இலங்கை இராணுவத்தின் மீது பதுங்கியிருந்து தாக்குதல் ஒன்றை நடத்தியது இரு அதிகாரிகள் உட்பட 44 சிப்பாய்கள் கொல்லப்பட்டார்கள்.

1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 2 ஆம் திகதி, கொழும்பில் வைத்து இலங்கையில் மிக அதிகாரமிக்க அமைச்சரான பாதுகாப்பு இராஜங்க அமைச்சரும் பெரும் தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்ன கொல்லப்பட்டார் கார்க்குண்டு மூலம் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.இந்தக் குண்டுவெடிப்புச்சம்பவத்தில், பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸ் கமாண்டோக்கள் மற்றும் அப்பாவி வழிப்போக்கர்கள் உட்பட 30க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டார்கள். இரண்டு பாதுகாப்பு ஜீப்புகள், பக்கத்துணை வாகனம் ஒன்று மற்றும் இரண்டு பஸ்கள் ஆகியனவும் பாரிய சேதமடைந்தன. குண்டுவெடிப்புச் சத்தத்தை 10 கிலோ மீட்டர் தூரத்திற்கும் அப்பால் கேட்கக்கூடியதாக இருந்தது.

### நாடாளுமன்ற உறுப்பினர்களின் கொலைகள்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்படுவது, முதல் தடவையாக 1975 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகியது, அமிர்தலிங்கமத்தின் மகன் காண்டீபன் மற்றும் ஒரு சில தமிழ் இளைஞர்கள் அல்பிரட் துரையப்பாவைக் கொலை செய்தபோது இது ஆரம்பித்தது.

இந்தக் கொலையுடன் தொடர்பில் இருந்து காண்டீபனைக் காப்பாற்றும் முகமாக, கொலைக்காண பொறுப்புக்கு எல்ரிரிஈ தலைவர் உரிமை கோரினார் என்று நான் நம்பகமாக அறிந்து கொண்டேன்.

அறுபதுகளிலும் எழுபதுகளிலும் அல்பிரட் துரையப்பா மக்களால் விரும்பப்பட்ட ஒரு தமிழ்த் தலைவராக விளங்கினார். 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மற்றும் மீண்டும் ஜுலை 1960 1965 இருமுறை நாடாளுமன்றத்திற்கு யாழ்ப்பாணத் தொகுதியில் இருந்து தெரிவானார். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொன்னாலை வரதராஜப்பெருமாள் இந்துக் கோயிலுக்கு தரிசனம் செய்ய சென்றபோது அவர் எல்.ரி.ரி.ஈ துப்பாக்கிதாரிகளினால் கொல்லப்பட்டார். அவர் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வராகவும் பதவிவகித்தார். இந்தக் கொலைக்கு எல்.ரி.ரி.ஈ பகிரங்க உரிமை கோரியது.

அல்பிரட் துரையப்பாவின் கொலையை அடுத்து, முன்னாள் வட்டுக்கோட்டைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அ. தியாகராஜா 1981 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார்.அதைத் தொடர்ந்து, தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினாகளான வீ.தர்மலிங்கம் மற்றும் கே. ஆலாலசுந்தரம் ஆகியோர் 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் செல்வம் அடைக்கலநாதனால் வழிநடத்தப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினால் (ரெலோ) அவர்களுடைய வீடுகளில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு, கொல்லப்பட்டார்கள்.இந்திய அமைதி காக்கும் படையினால் 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட இந்திய குடியரசுத் தின வைபவங்களில் கலந்து கொண்டார் என்று காரணத்திற்காக,

(தொடரும்)

# நம்நாட்டு திருத்தலப் பாடல்

பாடல் - வல்லமைதரும் வல்லிபுரம்
பாடலாசிரியர் - வெற்றி துஷ்யந்தன்
இசை - உ. சுதர்ஷன்
பாடியவர் - பஞ்சமூர்த்தி குமரன்

**பல்லவி**

வல்லமை தந்திடும் வல்லிபுரம் -ஸ்ரீமன்
நல்லருள் நல்கிடும் நந்தவனம்
கோவிந்த நாம சங்கீர்த்தனம் -எங்கள்
மாயவண்ண கண்ணனுக்கு திரு வந்தனம்

**சரணம் 01**

அலைபாடும் கடலோடு உருவாகினாய் -எங்கள்
அருள் யாவும் தருகின்ற கருவாகினாய்
பரந்தாமன் பாதம் கதி என்கிறோம்
சிரம் தாழ்த்தி உன்னை துதி செய்கிறோம்
வல்லிபுரம் மீதமர்ந்த மாயவனே போற்றி
வல்ல புகழ் யாவும் நிறை தூயவனே போற்றி

**சரணம் 2**

மணலேறி கடல் வந்து நீராடுவாய் -மக்கள்
மனமேறி திடமான இடமாகுவாய்
மலை தூக்கி குடையாக்கி இடர் போக்கினாய் -கீதை
உபதேசம் தனை கூறி வளமாக்கினாய்
வல்லிபுரம் மீதமர்ந்த மாயவனே போற்றி
வல்ல புகழ் யாவும் நிறை தூயவனே போற்றி

நீலவண்ண கண்ணா நித்தில வர்ணா
ஞாலம் போற்றும் மன்னா எங்கள் மதுசூதனா
பாதக் கமலம் பற்றிடவே நாங்கள் வல்லிபுரம் வந்தோம்
நாத அருள் ரூபமே பாட்டிசையை தந்தோம் .

உங்கள் ஊரிலுள்ள திருத்தலப் பெருமை பற்றிய பாடல்களை

**நம்நாட்டு திருத்தலப் பாடல்**
**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.

எனும் முகவரிக்கு பாடலை எழுதியவர், பாடியவர், இசையமைத்தவர் பெயர் விபரங்களுடன் அனுப்பி வைக்கவும்.

# சுடோகு புதிர் - 1

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2 | 8 | 2 | | | 6 | |
| 4 | | | | | | | | 9 |
| | 9 | 1 | 4 | | | | 5 | |
| | | | 2 | 9 | | | | |
| | | | 5 | 7 | 1 | | | |
| | | | | | 6 | | | |
| | 5 | | | | 3 | 1 | 8 | |
| 6 | | | | | | | | 3 |
| | 3 | | | 1 | 8 | 6 | | |

**விளையாடும் முறை**

1. ஒவ்வொரு அறையிலும் 1 முதல் 9 வரை உள்ள எண்களை ஒரு முறை மட்டுமே எழுத வேண்டும்.
2. ஒவ்வொரு கிடைமட்ட (Row) வரிசையிலும் 1 முதல் 9 வரையுள்ள எண்கள் ஒரு முறை மட்டுமே வர வேண்டும்
3. ஒவ்வொரு நெடு (column) வரிசையிலும் 1 முதல் 9 வரையுள்ள எண்கள் ஒரு முறை மட்டுமே வர வேண்டும்.

சுடோகு புதிரை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி

**சுடோகு புதிர் - 1**
**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# குறுக்கெழுத்துப் போட்டி - 3

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | ☒ | 2 | ☒ | 3 |
| | ☒ | 4 | | | |
| ☒ | 5 | | | ☒ | |
| 6 | ☒ | | ☒ | 7 | ☒ |
| 8 | | ☒ | 9 | | |
| | ☒ | 10 | | | ☒ |

**இடமிருந்து வலம்**

1. சிற்றரசர்கள் பேரரசருக்கு கட்டுவது.
4. இரும்பைக் கவர்வது
5. மாலை நேரம்.
8. இந்த மரம் தோப்பாகாது.
09.அழிக்க முடியாத செல்வம்.
10.வீட்டுச் சுவரில் இருப்பது.

**மேலிருந்து கீழ்**

1. மீன் பிடிக்க உதவுவது.
2. வீதிகள் இணையும் இடம்.
3. அரைக்கும் கருவி.
4. இந்தியாவுக்கு சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தவர்.
6. மரத்தில் செய்வது.
7. இரவிலே மலர்வது.
9. பாறையை உடைத்தால் கிடைப்பது.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் ஜூன் 01 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 04.06.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப்போட்டி -1 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**
1. திகதி
3. ஆடி
5. ருசி
7. மலை
8. பந்தி
10. பதுமை
12. மைத்திரி

**மேலிருந்து கீழ்**
1. திசை
2. திருமதி
4. டில்லி
6. சிலை
8. பசுமை
9. காது
10. பரி

**சரியான விடையை எழுதியவர்கள்**

1. P. வனிதா, பூவரசம்குளம், வவுனியா.
2. உ. மதுமலர் – வல்வெட்டித்துறை கிழக்கு, வல்வெட்டி.
3. என். ராஜி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
4. க. விதுசன் – இருபாலை வீதி, கோண்டாவில்.
5. ம. ராகவன் – கரடிப்போக்கு, கிளிநொச்சி

**அனுப்ப வேண்டிய முகவரி:**
பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 3**
**தினச்செய்தி வாரமலர்,**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.


## சமுத்திரகனியின் கணிக்கை



சினிமாவிலிருந்து ஒதுங்கியிருந்த பாலசந்தர், குழந்தைகளை மையப்படுத்தி ஒரு ஸ்கிரிப்டை எழுதினார். அதில் சமுத்திரகனி முக்கிய வேடத்தில் நடிப்பதுடன், உதவி இயக்குனராக பணிபுரிவதாகவும் இந்தது. படத்தை தொடங்க திட்டமிட்ட நேரத்தில்தான் பாலசந்தரின் மகன் எதிர்பாராதவிதமாக மரணமடைந்தார். மகனின் பிரிவால் மனதளவில் சோர்ந்துபோன பாலசந்தர் அந்த ஸ்கிரிப்டை கடைசிவரை இயக்கவில்லை.

தனது குருவின் கனவு படத்தை எடுக்க சமுத்திரகனி முன்வந்துள்ளார். பாலசந்தர் விரும்பியது போல் அவர் கேட்டுக்கொண்ட வேடத்தில் நடிப்பதுடன் படத்தை இயக்கவும் செய்கிறார். குருவின் ஸ்கிரிப்டுடன் ஏதாவது தயாரிப்பாளரை தேடிப்போய் படமாக்குங்கள் என்று கேட்பதை அவமானம் என நினைக்கும் சமுத்திரகனி, தானே படத்தை தயாரிப்பது என்றும் முடிவு செய்துள்ளார்.





## பிரியங்காவின் பயம்



நடிகைகள் தங்கும் அறையில் ரகசிய கமராக்களை பொருத்தி விடுகின்றனர். படுக்கை அறை, குளியல் அறைகளில் இவற்றை பதுக்கி வைக்கிறார்கள். இதன் மூலம் ஆபாச படங்களை எடுத்து இணையதளங்களில் வெளியிட்டு விடுகின்றனர். இதனால் நட்சத்திர ஹோட்டல்களில் தங்குவதற்கு எனக்கு பயமாக இருக்கிறது" என்று ஹிந்தி நடிகை பிரியங்கா சோப்ரா கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கூறும்போது.

"நட்சத்திர ஹோட்டல்களில் தங்குவதை நான் அசவுகரியமாக நினைக்கிறேன். ரகசிய கமராக்கள் பொருத்தி வைத்து இருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன். இதனால் ஹோட்டல்களில் நான் தங்குவது இல்லை. வெளிநாடுகளுக்கு போகும்போதும் ஹோட்டல்களில் தங்குவதை தவிர்க்கிறேன். தற்போது ரெலிவிஷன் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் ஹொலிவூட் படத்தில் நடிப்பதற்காகவும் அடிக்கடி அமெரிக்கா செல்ல வேண்டி இருக்கிறது. அங்கு ரகசிய கமரா பயத்தினால் ஹோட்டல்களில் தங்குவது ,இலை. இதனால் அமெரிக்காவில் சொந்தமாக வீடு வாங்க முடிவு செய்துள்ளேன். இதற்காக நல்ல வீடு தேடி வருகிறேன்" என்றார்.

## லை மாதம் 'கபாலி'

'கபாலி' டீஸர் வெளிவந்தது முதலே, படத்தை எப்போது பார்க்கலாம் என ஒவ்வொரு ரசிகர்களும் தவம் கிடக்கிறார்கள். ரஞ்சித்தின் இயக்கத்தில் பழைய மாஸ் ரஜினியை பார்த்த திருப்தியில் 'கெத்தா'க சுற்றிவருகிறார்கள் சூப்பர்ஸ்டார் ரசிகர்கள். படத்தின் ரிலீஸ் குறித்து அதிகாரபூர்வமாக நாங்கள் அறிவிக்கும் வரை அமைதியாக இருங்கள் என தயாரிப்பாளர் தாணுவே சொல்லிவிட்டாலும்கூட ஆளாளுக்கு ஒரு ரிலீஸ் தேதி அறிவித்து வருகிறார்கள். அந்தவகையில், முதலில் ஜூலை 7ஆம் தேதி 'கபாலி' திரைப்படம் வெளியாகும் என்று கூறப்பட்டது. அதன்பின்னர், மே இறுதியில் பாடல்கள், ஜூன் முதல் வாரத்தில் படம் ரிலீஸ் என்ற தகவலும் வந்தது.லேட்டஸ்ட்டாக, விநியோகஸ்தர் தரப்பு 'கபாலி'க்காக ஜூலை 1ஆம் தேதி தியேட்டர்களை 'புக்' செய்து வைத்திருக்கிறதாம் அனேகமாக இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியா-கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## நிறம் மாறிய நைனிகா



நைனிகாவின் சட்டையின் நிறம் மாறியுள்ளது
சட்டையின் நிறத்தை தபால் அட்டையில் எழுதி
தினச் செய்தி
தில்லைக்கட்டி வீதி சுன்னாகம்
என்ற முகவரிக்கு அனுப்பவும் சரியாக எழுதும்
ஐவரின் பெயர் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்



## அஜீத்துடன் நடிக்கும் ரித்திகா சிங்

சிறுத்தை சிவா-அஜீத் 3 வது முறையாக இணைந்திருக்கும் தல 57 படத்தின் படப்பிடிப்பு விரைவில் துவங்கப்படவிருக்கிறது. 9 வருடங்கள் கழித்து அஜீத் இதில் இரட்டை வேடங்களில் நடிக்கப் போவதாக கூறுகின்றனர்ள ,'இறுதிச்சுற்று' நாயகி ரித்திகா சிங் இப்படத்தில் அஜீத்துடன் இணைந்து நடிக்கப் போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. சமீபத்தில் அனுஷ்கா இப்படத்தில் நடிக்கப்போவதாக செய்திகள் வெளியா கின. தற்போது அனுஷ்காவுடன் இணைந்து ரித்திகா சிங்கும் நடிக்கப் போவதாக கூறுகின்றனர்

## லாரன்ஸ்- வடிவேலு கூட்டணியில் 'சந்திரமுகி 2'



பி.வாசு இயக்கத்தில் 2005 ம் ஆண்டு வெளியாகி மிகப்பெரிய ஹிட்டடித்த படம் சந்திரமுகி. ரஜினியுடன் இணைந்து பிரபு, ஜோதிகா, நாசர், வடிவேலு, மாளவிகா என ஏகப்பட்ட நட்சத்திரங்கள் இப்படத்தில் நடித்திருந்தனர்.

சிவராஜ்குமார், வேதிகாவை வைத்து பி.வாசு இயக்கிய 'சிவலிங்கா' திரைப்படம் கன்னடத்தில் மிகப்பெரிய வெற்றி பெற்றது. திரில் கிரைம் என்ற ரீதியில் உருவான இப்படத்தில் நடிகர் சக்திவேல் வாசுவும் முக்கிய வேடத்தில் நடித்திருந்தார்.இந்நிலையில் இப்படத்தின் தமிழ் ரீமேக் தற்போது சந்திரமுகி-2 என்ற பெயரில் உருவாகவுள்ளது.

இப்படத்தின் தமிழ் ரீமேக்கில் ரஜினி நடிப்பார் என்று அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருக்க, தற்போது லாரன்ஸ் நடிப்பது உறுதியாகியுள்ளது. லாரன்ஸுடன் இணைந்து முக்கிய வேடத்தில் வடிவேலுவும் நடிக்கவிருக்கிறார். சிவலிங்காவை கன்னடத்தில் இயக்கிய வாசுவே தமிழிலும் இயக்குகிறார்.தமிழ், தெலுங்கின் முன்னணி நடிகைகளில் ஒருவரான அனுஷ்கா, இப்படத்தில் லாரன்ஸுக்கு ஜோடியாக நடிப்பார் என்று முன்னதாக தகவல்கள் வெளியாகின. எனினும் இதுகுறித்த அதிகாரப்பூர்வ தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை



## விஜய் சேதுபதியை கவர்ந்த மஞ்சிமா

கே.வி.ஆனந்த் இயக்கத்தில் விஜய் சேதுபதி நடிக்கும் ஒரு படத்தை பிரமாண்டமாக தயாரிக்கிறது ஏஜிஎஸ். நாயகி தேர்வு நடைபெற்று வந்தபோது 'அச்சம் என்பது மடமையடா' படத்தின் நாயகியான மஞ்சிமா மோகனை நாயகியாக்கலாம் என விஜய் சேதுபதி கே.வி.ஆனந்திடம் சொன்னாராம். கே.வி.ஆனந்தும் ஓகே சொல்ல மஞ்சிமாவை புக் பண்ணியிருக்கிறார்களாம்.

அச்சம் என்பது மடமையடா படத்தில் சிம்புவுடன் நடிக்கும் மஞ்சிமா விக்ரம் பிரபுவுடன் ஒரு படத்தில் நடிக்கிறார். மலையாளத்தில் கொடிகட்டிப்பறக்கும் இவரின் முதல் தமிழ்ப்படம் படம் வெளியாக முன்னரே பல படங்கள் தேடிவரத் தொடங்கி விட்டன.



# வடக்கின் வல்லவன்-2016



அணியில் மூன்று நைஜீரிய வீரர்கள் விளையாடி தமது திறமைகளை வெளிப்படுத்தியமைகுறிப்பிடத்தக்கது.


18.05.2016 அன்று நடைபெற்ற போட்டியில் மனோகரா வளையாட்டு கழகத்தினை புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழகம்க சந்தித்தது இப்போட்டியில் மனோகரா வெி. பெற்றது.ஆட்ட நாயகனாக மனோகரா கழக துஸ்யந்தன் தெரிவு செய்யப்பட்டு அவரிற்கானபண பரிசு மற்றும் பதக்கத்தினை கழக நலன் விரும்பி .கவி வழங்கி கௌரவித்தார்.வெள்ளி கிழமை 13 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் மாந்தை சென்.அன்ரனீஸ் கழகத்தி எதிர்த்து விளையாடிய முல்லைத்தீவு சென்.யூட்ஸ் விளையாட்டுக் கழகம் 4–0 என்ற கோல



வருகைதராததால்சென்.சேவியர் வி.க வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.


பலாலி விண்மீன் ,கரவை சுடர் ஆகிய வற்றுக்கிடையேயான போட்டியில் 3:0

தினச்செய்தியின் அனுசரணையில் வல்வெட்டித்துறை நெற்கொழு விளை யாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் –2 போட்டியில்




றோயல் அணியை எதிர்த்து எதிர்த்து நவசக்தி அணி மோதியது.இரு அணிகளுன் தலா இரண்டு கோலகள் அடித்ததனால் ஆட்டம் சமனிலையில் முடிந்தது. பெனால்ரியில் ரோயல் 3–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக றோயல் கழக வீரர் கஜகோபன் தெரிவு செய்யப்பட்டு

எதிர்த்து விளையாடிய இமையாணன் மத்தி விளையாட்டு கழகம் 4–0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக இமையாணன் மத்தி கழக வீரர் சுலக்சன் தெரிவு செய்யப்பட்டார். அவருக்கான பனப்பரிசையும் பதக்கட்தையும் கழுகுகள் கழக முன்னாள் கோல் காப்பாளர் .மு.ஸ்ரீஸ்கண்ணன் வழங்கி கௌரவித்தார். சனிக்கிழமை விருந்தாக அமைந்த இரண்டு போட்டிகளில் இரண்டாவதுபோட்டியாக மெலிஞ்சிமுனை இருதயராஜாவை எதிர்த்து முல்லைத்தீவு உதயசூரியன் மோதியது. அனல் பறந்தஇரண்டாவது போட்டியின் ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் தலா ஒரு கோல அடித்தன் பெனால்ரியில் இரு அணிகளும் தலா இரண்டு கோல்கள் அடித்தமையினால் மேலதிக பெனால்ரியில் இருதயராஜா கோல அடித்து வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக இருதயராஜா அணிய்ல் கோல் காப்பாளர் ஜெயபிரசாத் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பண பரிசையும் பதக்கத்தையும் கழுகுகள் கழக மூத்த வீரரும் கழக ஆலோசகரும் ஆகிய . துரைச்சாமி செல்வராசா (மதன்) வழங்கி கௌரவித்தார். மாதகல் சென் தோமஸ் நொச்சி சென்.மேரிஸ் அணி ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற போட்டியில் ஆட்ட நேர முடிவில் 1:0 என சென்.மேரிஸ் வெற்றி பெற்றது. போட்டியின்



கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக சென்.யூட்ஸ் கழக வீரர்



பியூஸ்லாஸ் தெரிவு செய்யப்பட்டதுடன் அவரிற்கான பணபரிசு மற்றும் பதக்கத்தினை கழுகுகள் வி.க முன்னாள் கோல் காப்பாளர் மு.ஸ்ரீஸ்கண்ணன் வழங்கி கௌரவித்தார். வடமாகாண வல்லவன் தொடரில் 18 ஆம் திகதி நடைபெற இருந்த இரண்டாவது போட்டி ரெட்ரேஞ்சர்ஸ் வி.க

என்ற கோல் கணக்கில் பலாலி விண்மீன் வி.க வெற்றி பெற்றது.போட்டியின் ஆட்ட நாயகனாக விண்மீன் கெனடி தெரிவு செய்யப்பட்டதுடன் அவருக்கான பண பரிசு மற்றும் பதக்கத்தினைஓய்வுநிலை பிரதி கல்விப் பணிப்பாளர்.சி.சிவப்பிரகாசம் வழங்கி வைத்தார். வல்வை விளை யாட்டுக் கழகம் புத்தூர் எவறெஸ்ட் ஆகியவற்றுக்கிடையேயான போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தமையால் பெனால்ரி வழங்கப்பட்டது. வி.க மோதியது. சம பலம் கொண்ட போட்டியாககாணப்பட்டதனால் இரு அணிகழும் தமது முழு முயற்சியுடன் விளையாடின. 4:2 என்ற கோல் கணக்கில் வல்வை வெற்றி பெற்றது.போட்டியின் ஆட்ட நாயகனாக வல்வை வீரர் தாஸ் தெரிவு செய்யப்பட்டதுடன் அவருக்கான பண பரிசு மற்றும் பதக்கத்தினைஓய்வுநிலை பிரதி கல்விப் பணிப்பாளர் .சி.சிவப்பிரகாசம் வழங்கி வைத்தார்.



அவருக்கான பண பரிசையும் பதக்கத்தியும கழுகுகள் விலையாட்டுக் கழகத்தின் மூத்த வீரரும் கழக ஆலோசகரும் ஆகிய துரைச்சாமி செல்வராசா (மதன்) வழங்கி கௌரவித்தார்.வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் பொற்பதியை

ஆட்ட நாயகனாக சென்.மேரிஸ் தேவகிங்ஸ்லி தெரிவுசெய்யப்பட்டு அவரிற்கான பண பரிசு மற்றும் பதக்கத்தினை யாழ் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் விஜிதரன் வழங்கி கௌரவித்தார்.

இந்த போட்டியில் சென்.தோமஸ்







ஜெ. யோகராஜ்

# MS OFFICE இன் பயன்களும் பாவனையும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இங்கே ஒரு ஆவணத்தின் முதல் பக்கமும் இரண்டாம் பக்கமும் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் பக்கங்களை இலக்கமிட முதலில் மேல் மூலையில் உள்ள Menu வசதிகளில் insert எனும் தெரிவை மேற்கொண்டு அதில் Page Numbers எனும் வசதியை தெரிவு செய்தால் பக்கங்களை இலக்கமிடுவதற்கான தன்மையை பெற்றுக் கொள்ளலாம்.





Insert - pagenumbers எனும் தெரிவை மேற்கொள்ளும் போது மேலுள்ள படத்தை நாம் காணலாம். இதில் வலது, இடது, நடுப் பகுதி என கேட்கப்பட்டிருக்கும். அவற்றுள் நடுப்பகுதியை தெரிவுசெய்தால் நடுவில் இலக்கம் இடப்படும்.

அடுத்ததாக ஒரு ஆவணத்திற்கு திகதி மற்றும் நேரகுறிப்புக்களை எவ்வாறு பதிந்துகொள்வது என்பது பற்றி பார்ப்போம்.

இதற்குமேல் மூலையிலுள்ள Menu தெரிவுகளில் insertdate and time எனும் தெரிவை மேற்கொள்ள வேண்டும். இதற்கான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

இந்த ஆவணத்திற்கான திகதியை இடது மூலையில் இட வேண்டுமாயின், குறிப்பிட்ட இடத்திற்குச் (இடது மூலை) சென்று மேற்குறிப்பிட்ட தெரிவை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறே வலது மூலையில் குறிப்பிட வேண்டுமாயின், அவ்விடத்திற்குச் சென்று இந்தத் தெரிவை மேற்கொள்ளலாம். ஒரு ஆவணத்திற்கான திகதியை ஆங்கிலத்திலும் மற்றும் தமிழ் உட்பட ஏனைய பிரபல மொழிகளில் குறிப்பிடலாம். ஆங்கிலமொழியில் குறிப்பிட வேண்டுமாயின், Insert - date and time எனும் தெரிவை மேற்கொண்டு English US என்ற பகுதியை தெரிவுசெய்து கொள்ள வேண்டும். அதேவேளை, Western எனும் திகதி கலண்டர் வகையை நாம் தெரிவுசெய்து கொள்ளவேண்டும். இதற்கான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.




இவ்வாறு செய்யும் பொழுது எமக்கு ஆங்கில முறையில் அமைந்த திகதியைப் பெறலாம்.


January 22, 2011 இவ்வாறான ஒரு திகதி குறிப்பை நாம் பெறுவோம்.

இதே திகதியை தமிழில் பெறவேண்டுமாயின், மேலே குறிப்பிட்ட வழி முறையை பின்பற்றி English US என்ற பகுதியில் Tamil எனும் தெரிவை மேற்கொண்டால் எமக்கு தமிழ் திகதி குறிப்பை பெறலாம்.

22 ஜனவரி 2011 எனும் திகதியை நாம் பெறலாம்.

அடுத்து ஒரு ஆவணத்தை எவ்வாறு பெரிதாக்குவது அல்லது சிறிதாக்குவது என்பது பற்றி பார்க்கலாம். இது காட்சிக்காக மட்டும் வரையறுக்கப்பட்ட ஒரு வசதியாகும். இதனை பெற்றுக் கொள்ள நாம் மேல் மூலையிலுள்ள Menu தெரிவுகளில் View→Zoom எனும் தெரிவை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும் போது 200%, 100% மற்றும் 75 எனும் வகைகளை அந்த விசேட திரை காண்பித்து உங்களது தெரிவை எதிர்பார்க்கும். 200% என்பது இருக்கின்ற ஆவணத்தை இரண்டு மடங்காக பெரிதாக்கிக் காண்பிப்பதாகும். 100% என்பது இருக்கின்ற அளவாகும். 75% என்பது இருக்கின்ற அளவைவிட 1/4 குறைவானதாகும். இதற்கான செயல்முறை விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் தொடரும்....




## கணினியின் வேகத்தை அதிகரிக்கும் வித்தை

இதற்கு முதலில் தேவையில்லாத பைல்களை கம்பியூட்டர்களிலிருந்து அழிப்பது நல்லது. முதலில் ஸ்டார்ட் பட்டனை அழுத்தி, அதில் ப்ரோக்கிராம் பட்டனை அழுத்த வேண்டும். அதன் பின் அக்சஸரீஸ் பட்டனை அழுத்தி, சிஸ்டம் டூல்ஸ் ஆப்ஷனை க்ளிக் செய்தால் டிஸ்க் க்ளீன் அப் மற்றும் டிஸ்க் டீ.:ப்ரேக்மென்ட்டர் என்ற ஆப்ஷன் கொடுக்கப்பட்டிருக்கும். இந்த ஆப்ஷன்களில் க்ளீன் அப் என்ற பட்டனை க்ளிக் செய்தால் தேவையில்லாத ஃபைல்கள் அனைத்தும் அகற்றப்படும் .

மேலும் டீ.:ப்ரேக்மென்ட் என்ற பட்டனை அழுத்தி, எளிதாக சிதறி கிடக்கும் பைல்களை வரிசைப்படுத்தலாம்.

வாரம் ஒரு முறை டிஸ்க் க்ளீன் அப் மற்றும் டிஸ்க் டீ.:ப்ரேக்மென்ட்டேஷன் செய்துகொள்வது, கம்பியூட்டரின் வேகம் குறையாமல் இருக்க உதவும்.

**உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் கானும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.**

yogaraj35@gmail.com

ஜெ.யோகராஜ் (email Address : yogaraj35@gmail.com)




## அருமருந்தாகும் அகத்தி

டாக்டர் கோ.அர்ச்சுணன்

அகத்திக்கு முனி, கரிரம், அச்சம், பேரகத்தி என்னும் பெயர்கள் உண்டு. இதன் ஆங்கிலப் பெயர் 'அகத்தி' (Agathi) என்பதேயாகும். இம் மரத்தின் தாவரப்பெயர் செஸ்பேனியா கிராண்டி.:ப்ளோரா (Sesbania grandiflora) என்பதாகும். இதற்கு அகத்தி கிராண்டி.:ப்ளோரா (Agathi grandiflora) என்றும் பெயர் உண்டு. இது பெரும்பாலும் வெற்றிலைத் தோட்டங்களில் வெற்றிலைக் கொடி படருவதற்கும் நிழலைத் தருவதற்கும் பயிரிடப்படுகிறது. விரைவில் வளரும் தன்மை கொண்ட மர வகைகளில் இதுவும் ஒன்று. மரம் உறுதியற்ற தன்மை கொண்டது. தேனீ வளர்ப்பதற்கு நல்ல மரமாகும். இது வீட்டுத்தோட்டங்களிலும் வேலி ஓரங்களிலும் தோட்டக்காலங்களில் வரம்பு மற்றும் வேலி ஓரங்களிலும் வளர்க்கப்படுகின்றது. இதன் இலைகள் கீரையாக சமைத்து உண்ணப்படுகின்றன. பூவும் சமையலில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. விதைகள் மூலம் இனவிருத்தி செய்யப்படுகிறது. விதைத்து 6 மாதத்திலிருந்து இலைகளைப் பறித்துச் சமைக்கலாம். இலைகளை பொரியல் செய்தோ கூட்டு செய்தோ உணவாகக் கொள்ளலாம். பூக்கள் இலைகளை விட பெரிதாக இருக்கும். இது டிசெம்பர் – ஜனவரி மாதங்களில் பூக்கும். பூக்களைப் பகோடா செய்து சாப்பிடலாம். மேலும் தழையைக் கால்நடைக்கு உணவாகவும் தாவரங்களுக்கு உரமாகவும் பயன்படுத்தலாம்.

### சத்துகள்

நூறு கிராம் அகத்திக் கீரையில் உள்ள சத்துகள் பின்வருமாறு. (கிராமில்)

புரதம் 8.4, கொழுப்பு 1.4, நார்ப்பொருள் 2.2, மாவுப்பொருட்கள் 11.8, கல்சியம் 1130 மிகி, இரும்பு 80 மிகி, தயமின்0.21மிகி ரைபோ.:பிளேவின் 0.09 மிகி நியாசின் 1.2 மிகி விட்மின் 'சி' 169 மிகி கரோட்டின் 5400 மைக்ரோகிராம் சக்தி 93 மிகி.

நூறு கிராம் அகத்தி கீரையில் 1.34 கிராம் நைட்ரஜன் உள்ளது. ஒரு கிராம் நைட்ரஜனில் கீழ்க்கண்ட அமிலங்கள் உள்ளன.

ஆர்ஜினைன் 0.36 ஹிஸ்டிடின் 0.12 லைசின் 0.25 டிரிப்டோ.:பேன் 0.10 .:பீனைல் அலனின் 0.38 மீதியோனைன் 0.09 சிஸ்டின் 0.09 திரியோனைன் 0.30 லியூசின் 0.56 ஐசோலியூசின் 0.39 வேலைன் 0.43.

### மருத்துவப் பண்புகள்

அகத்திக்கீரை, பூ, வேர், பட்டை, முதலியவை மருந்துக்கு உதவுகின்றன.


### இலையின் பயன்கள்

அகத்தி இலையில் மிகுந்த கல்சியம், பொஸ்பரஸ் இருப்பதால் எலும்பு வளர்ச்சிக்கு அகத்திக்கீரை நல்லது. இலைகள் வியர்வையினால் உண்டாகும் துர்நாற்றத்தைப் போக்கும். உடல் அரிப்பைப் போக்கும். இலைகளில் விட்டமின் 'ஏ' மிகுந்த அளவு இருப்பதனால் மாலைக் கண் நோயை குணமாக்கும். இலைச் சாற்றைக் கண்ணின் பார்வை குறைவுக்கு கண்ணில் பிழிந்து ஊற்றினால் நல்ல பயன் கிட்டும். இலையின் கஷாயம் பேதிக்கும், தாய்மார்களுக்கு அதிக பால் சுரக்கவும் பயன்படுகிறது. இத் தழையை மாடுகளுக்கு உணவாக கொடுக்க பால் மிகுதியாக சுரக்கும். உடல் அரிப்பு, காக்கா வலிப்பு, கபம், குட்டம் ஆகியவற்றுக்கும் இது நல்லது. அகத்திக்கீரை பித்த மயக்கத்தை போக்கும். முதிர்ந்த கீரையை காட்டிலும் இளந்தளிரை உணவாகக் கொள்ளுவது சாலச் சிறந்தது. அகத்திக்கீரையை உணவுடன் வாரம் ஒரு முறை சேர்த்து உண்ண மலச்சிக்கல் நீங்கும். அறிவு தெளிவடையும். வாய்ப்புண் குணமாகும். இலையின் கஷாயத்துடன் ஒன்றிரண்டு தேக்கரண்டி தேன் சேர்த்து பேதிக்கு மருந்தாக பயன்படுத்துவர். அகத்திகீரைச் சாற்றுடன் ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெய் கலந்து கொப்பளித்தால் வாய்ப்புண் நீங்கும்.

### பூவின் பயன்கள்

அகத்திப் பூவை நெய்யில் வதக்கி உண்பதால் உடல் சூடு தணியும். மூல நோயினால் உண்டாகும் தொந்தரவுகளும் இதனால் நீங்கும். பூக்களுக்கு குளிர்ச்சியைத் தரும் தன்மையுண்டு. பசியை உண்டாக்கும். வாதத்தை போக்கும். மாலைக்கண் நோயைப் போக்கும். மார்புச்சளி கீல்வாதம் போன்றவற்றை போக்கும். அகத்திப்பூவை கண்ணில் பிழிய கண்நோய் போகும். பூவை சமைத்து உண்டால் பித்தம் போகும். சிவப்பு பூக்கள் மூக்கில் உண்டாகும் இரத்த ஒழுக்கை நிறுத்தும். உள் வெப்பத்தை நீக்கும். நஞ்சுக்கு மாற்று மருந்தாகவும் உதவும். வாதத்தை போக்கும். காய்ச்சல் மற்றும் உடல் வலியைப் போக்கும். அறிவை விருத்தி செய்யும். உணவிற்கு சுவையை ஊட்டும். இது தாகத்தை போக்கும்.







## போட்டிச் சிறுகதை 2



பெயர் : பராசக்தி வைரமுத்து
(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர்)
முகவரி: புளியம் பொக்கனை,
பரந்தன்.
சிறுகதை: வாழ்வு வாழ்வதற்கே




அஞ்சலை விரைந்து நடக்கிறாள், முன்பள்ளி நோக்கி, நேரம் முற்பகல் 11.30 மணி மகள் சுகனி தாயின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். அஞ்சலையின் வீடு முன்பள்ளியில் இருந்து கூப்பிடு தூரம் தான். மற்றைய பிள்ளைகளோடு சேர்ந்து வர முடியும் ஆனாலும் அஞ்சலை நேரே போய்ப் பொறுப்பேற்றுப் பிள்ளையைக் கூட்டி வர விரும்புவாள்.

அஞ்சலையின் கணவர் கிருஸ்ணதரர் ஓர் ஆசிரியர். அவர் அடுத்துள்ள நகரப் பாடசாலையில் கற்பித்து வருகிறார். அவருடன் மூத்த மகன் ஜெய்யும் காலையில் போனால் பிற்பகல் மூன்று மணியளவில் வீடு திரும்புவார்கள். ஜெய்க்கு இப்போ பத்து வயது. ஐந்தாம் வகுப்பு படிக்கிறான்.

அஞ்சலையின் குடும்பம் மிக அமைதியானது. மெல்லெனப் பாயும் நீரோடை போன்றது. குழந்தைகளின் சிரிப்பொலியும் அவர்களோடு பெற்றோர் அளவளாவுதலும் இனிமையான உணர்வினை ஏற்படுத்தும். தாத்தா ஏரம்பரும் பாட்டி சிவகாமியும் சேர்ந்தால் பஞ்சாமிர்தமாக இருக்கும்.

'அஞ்சலா அஞ்சலா' விரைந்து சென்று கொண்டிருந்த அஞ்சலை திரும்பிப் பார்க்கிறாள். அவளது பால்ய நண்பி தேவகி சைக்கிளில் வந்து கொண்டு இருக்கிறாள். அவளும் தனது மகனை முன்பள்ளியில் இருந்து கூட்டிவருவதற்காக வந்து கொண்டிருக்கிறாள்.

'ஏன் அஞ்சலா உங்கள் வீடு கிட்ட தானே இருக்கு சுகனி தனிய வர மாட்டாளா? என்னுடைய வீடு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிறபடியால் வரவேண்டியிருக்கு' என்றாள் தேவகி.

'சுகனி சின்னப்பிள்ளை தானே தேவகி கூட்டி வந்து விட்டால் நிம்மதி.'

'சமையல் எல்லாம் முடிஞ்சுது போல.'

'இல்லை இல்லை எல்லாம் அரையும் குறையும் தான். சுகனி என்னை பார்த்துக் காத்திருப்பாள். பிள்ளைகளைப் படிப்பித்தால் மட்டும் போதாது. எங்கட கண்காணிப்பும் பாதுகாப்பும் மிகமிக அவசியம்' என்று பதில் சொன்னாள் அஞ்சலை.

'ஓம் ஓம் இப்ப நாட்டிலை நடக்கிற நடப்பைப் பார்த்தால் நன்மை தீமை தெரியாத எங்கட பிஞ்சுகளை எப்படி ஆளாக்கப் போகிறோம் என மனம் அடிச்சுக் கொள்ளுது' என்றாள் தேவகி.

தேவகியின் பதிலைக்கேட்டு திடுக்கிட்ட அஞ்சலை பழைய நினைவுகள் நிழலாட அமைதியாக நடக்கலானாள். அவள் கா.பொ.த. உயர்தர வகுப்பில் கற்றுக்கொண்டிருக்கும் போது அவளது வாழ்வில் ஏற்பட்ட மறக்க முடியாத அந்த சம்பவம் ................

அவளது கிராமம் வயலும் வயல் சார்ந்த மருத நிலமாகும். கணிசமான மக்கள் அக்கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருந்தனர். நெல் வயலுக்கு மத்தியில் அவர்களது வீடுகள் அமைந்திருக்கும் அவரவர் வீட்டைச் சுற்றி அவர்களது நெல் வயல்களும் இருக்கும். அஞ்சலையின் தந்தையான ஏரம்பர் ஒரு ஊக்கமான விவசாயி. உழவு மாடுகளை ஏரில் பூட்டி வயல்களை உழுது பண்படுத்தி நெல் விதைப்பார். அவளது தாய் சிவகாமி தன்னாலான உதவிகளைச் செய்வார். நெல் விதைக்கும் போது நெல் அள்ளிக் கொடுத்தல், களை பிடுங்கல், நாற்று நடுதல் போன்றவற்றைச் செய்வாள். அவர்களுக்கு ஒரே மகள் அஞ்சலை. பெற்றோர் அவளைக் கற்பித்து ஒரு ஆசிரியை ஆக்கிவிட வேண்டும் என்று விரும்பினார்கள்.

அந்த கிராமத்தில் உள்ள பாடசாலையில் க.பொ.த. உயர் தரம் வரை வகுப்புகள் இருந்தமையால் அஞ்சலையால் சிரமமின்றி படிக்க முடிந்தது. அது ஒரு கலவன் பாடசாலை ஆண் பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் விகற்பமின்றி அந்நியோன்னியமாகப் புத்தகங்கள் குறிப்பேடுகள் என்பவற்றை மாறிக் கொடுத்து படிப்பது வழக்கம்.

அஞ்சலையின் வகுப்பில் வளவன் எனும் ஒரு மாணவன் முதலாவதாக வருவான். படிப்பதில் கெட்டிக்காரன். மற்றைய மாணவர்கள் தமக்கு பாடங்களில் புரியாத பகுதியை அவனிடம் வினவிப் படிப்பார்கள். குழு வேலையின் போது வளவனின் குழுவில் அஞ்சலையும் இருந்தாள். ஒரு சமயம் அடுத்த நாள் கொடுக்கப்பட வேண்டிய ஒரு செயற்றிட்டம் வளவனின் குழுவால் முடிக்கப்படாமல் இருந்தது. மற்றைய குழுக்கள் தமக்குரிய ஒப்படையை செய்து முடித்து விட்டார்கள். வளவனின் குழு தாம் செய்ய வேண்டிய அந்த ஒப்படையை அன்று பாடசாலை விட்டதும் மாலையில் பள்ளியில் நின்று செய்து முடிப்பதாக தீர்மானித்தது. அதன்படி ஒரு வகுப்பறையை தேர்ந்தெடுத்து ஆயத்தமாகினர்.

பாடசாலை விட்டதும் மாணவர்களும் ஆசிரியர்களும் வரம்பு வழியாகத் தங்கள் வீடுகளுக்கு விரைந்து சென்று கொண்டிருந்தனர். வயலில் உழுது கொண்டிருந்த ஏரம்பர் மகளின் வரவை எதிர்பார்த்தபடி உழுது கொண்டிருந்தார். அஞ்சலையின் வகுப்பு பிள்ளைகளும் போய்க் கொண்டிருந்தனர். மகளைக் காணாத ஏரம்பர், 'அஞ்சலை வரவில்லையா' என்று வந்து கொண்டிருந்த தேவகியிடம் கேட்டார்.

'இல்லை மாமா அஞ்சலையின் குழு ஒப்படை செய்து முடிக்கவில்லை. பள்ளி விட்டதும் நின்று செய்கிறார்கள்' என்றாள் தேவகி.

ஏம்பர் உழவை நிப்பாட்டி மாடுகளை ஏரோடு பிணைத்து விட்டுப் பள்ளியை நோக்கி சென்றார். மாட்டுக்கு விரட்டும் பிரப்பந்தடியும் தன் கையிலிருப்பதை உணராதவராக விரைந்து சென்று ஒவ்வொரு வகுப்பறையாகப் பார்த்துக் கொண்டு போனார். சத்தம் ஏரம்பர் செவிகளில் கேட்டது. ஓடிச் சென்று அங்கு பார்க்கையில்....... வகுப்பறையின் வாசலை மறைத்துக்கொண்டு ஒரு மாணவன் நிற்கிறான். உள்ளே அஞ்சலை தன்னை பாதுகாத்து கொள்ளும் பொருட்டு சுற்றி சுற்றி ஓடிக் கொண்டிருந்தாள். மற்றைய இரு மாணவர்களும் அவளை பிடிப்பதற்காக தட்டு தடுமாறிக் கொண்டிருந்தனர். ஏரம்பர் கையில் இருந்த பிரப்பந்தடியால் வாசலை மறித்துக் கொண்டிருந்தவனுக்கு மளமளவென விட்டார் ஐந்தாறு. அவர்கள் சற்றும் இதை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப்போய் நின்ற மற்ற இரு மாணவர்களுக்கும் தனது ஆத்திரம் தீருமட்டும் நல்ல போடு போட்டார்.

மூன்று மாணவர்களும் அவர் காலில் விழுந்து வாழ்க்கையில் தாம் இப்படி தவறு செய்யமாட்டோம். என்று அவரது காலைப்பிடித்துக் கொண்டு கெஞ்சினார்கள். ஏரம்பர் என்ன செய்வது என்று தெரியாது மனம் கலங்கியவராக மகளை அழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனார்.

அன்று இரவு முழுக்க யோசித்தபடி கிடந்தவள் பொழுது விடிந்ததும் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தார். பள்ளிக்கூடம் போய்த் தலமையாசிரியரிடம் முறைப்பாடு செய்து ஊரைக் கூட்ட அவள் மனம் ஒப்பவில்லை. அந்த மூன்று மாணவர்களையும் அழைத்து நடக்கவிருந்த அனர்த்தத்தினால் விளையக்கூடிய பயங்கரத் தன்மையை எடுத்துக் கூறினார்.

பொலிசில் பிடிபட வேண்டி வந்து இருக்கும். ஜெயிலுக்கு போக நேரிடும். படிப்பு கெடும் எதிர்காலம் சூனியமாகும். சமூகம் மதிக்காது. நாம் நல்லவர்கள் என்ற உள்ளுணர்வு கெட்டு வருந்த வேண்டி நேரிடும். பெற்ற நம்பிகையோடு வாழ்கின்ற பெற்றோருக்கு ஏற்படக் கூடிய பாதிப்பு. இவை போன்றவற்றை விளக்கமாக மாணவர்களுக்கு எடுத்துச் சொன்ன போது 'இளங்கன்று பயமறியாது'எனத் தாங்கள் செய்யத் துணிந்த தகாத செயலை எண்ணி மூன்று மாணவர்களும் மனம் வருந்தினர். தாங்கள் செய்ய இருந்த தவறை தடுத்து ஆட்கொள்ள வந்த தெய்வமென ஏரம்பரை நினைத்து காலில் விழுந்து மன்னிக்கும்படி வேண்டினர்.

தற்போது அம்மூவரும் அரச சேவையாளராக நல் ஒழுக்க சீலர்களாக சமூகத்தில் கெளரவம் உடையவர்களாக வாழ்வதைக் கண்டும் கேட்டும் ஏரம்பர் மனம் மகிழ்வார். அன்று சீரழிய இருந்த நான்கு மனிதக் குழந்தைகளை காப்பாற்றி உத்தமர்களாக ஆக்கிய பெருமை ஏரம்பருக்குரியதே. அஞ்சலைக்கும் உரிய காலத்தில் கிருஸ்ணதரர் எனும் ஆசிரியரைத் திருமணம் செய்து வைத்தார். அவளது குடும்பம் மகிழ்ச்சிகரமானது.

((தொடர்ச்சி 19 இல்)

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

### சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 3

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..............................

..............................

சிறுகதையின் இலக்கம் : ..............................

எழுதியவர் பெயர் : ..............................

சிபார்சு செய்பவர் பெயர் : ..............................

முகவரி : ..............................

..............................

தொலைபேசி இலக்கம் : ..............................

.............................. ஆகிய நான்

இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................

ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி.**
**சுன்னாகம்.**

# அழிவுக்கு அடிகோலும் ஆனைத்தந்தங்கள்

இன்று 1.37 பில்லியனைத் தொட்டு தினம் தினம் ஏறிக் கொண்டிருக்கும் சீன ஜனத்தொகையில் 80 வீதமானவர்களுக்கு, தந்தத்தில் செய்த ஏதோவொரு பொருளை,அளவில் சிறியதாக இருந்தாலும் சொந்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற ஆசை மேலோங்கி இருக்கின்றது. இந்த நிலையில் 500 000 யானைகளின் தந்தங்கள் எங்ஙனம் சீனர்களின் தேவைக்கு போதுமானதாக இருக்கப் போகின்றது?

ஆசைப்படாதே அவதிப்படாதே என்கிறார்கள்.

-ராஜேஸ்மணாளன்-

ஆனால் ஆசைப்படாமல் மனிதர்களால் இருக்க முடிகின்றதா? ஆசை ஆசை என்று வளர்ந்து மனிதனின் ஆசைகள் பேராசைகளாக இன்று விரிந்து போயிருக்கின்றன. இந்தப் பேராசைகளின் அறுவடையாக இயற்கை நிலைகுலைந்து போயிருக்கின்றது. பல பறவைகள், மிருகங்கள் அடியோடு அழிக்கப்படுவது ஒருபுறமிருக்க அவை வதியும் காடுகளும் கடுகதியில் அழிந்து கொண்டு வருகின்றன.இன்றைய நிலையில் வெகுவேகமாக அழிக்கப்பட்டு வரும் ஒரு காட்டு விலங்குதான் யானை. அதன் தந்தங்களே அவற்றின் எதிரிகளாகி விட்டதால் இந்தத் தந்தங்களுக்காக அழகிய இந்த வனவிலங்குகளை ஈவிரக்கமின்றி மனிதன் கொன்றழித்து வருகின்றான். இன்னும் 15 அல்லது 20 வருடங்களில் யானைகளோ அல்லது காண்டாமிருகங்களோ அல்லது சிங்கங்களோ காட்டிலிருந்து முற்றாக அழிக்கப்பட்டு விட சித்திரங்களைக் காட்டி முன்னொரு காலத்திலே காட்டில் வாழ்ந்த மிருகங்கள் என்று பிள்ளைகளுக்கு கதை சொல்லும் நிலைதான் பெற்றோருக்கோ ஆசிரியர்களுக்கோ வரப்போகின்றது.

ஆபிரிக்க காடுகளில் கம்பீரமாகத் திரியும் யானைகளை பலவழிகளில் தந்த வேட்டைக்காரர்கள் கொன்றழிக்கின்றார்கள். றொக்கட் லோஞ்சேர்ஸ் மூலம் கைக்குண்டுகளை வீசியும் நஞ்சூட்டப்பட்ட அம்புகளால் தாக்கியும் பொறிகள் மூலம்உயிரோடு பிடித்தும் ஈட்டிகளால் தாக்கியும் உணவில் நஞ்சூட்டியும் இந்த யானைகளைக் கொல்கிறார்கள். 500, 000க்கும் குறைவாக யானைகளுடன் நிற்கும் ஆபிரிக்க கண்டத்தையே இவர்கள் குறிவைத்து அலைகிறார்கள். தந்தத்தை பெருவிலை கொடுத்து வாங்க ஒரு தொகையினர் அலைகின்ற இந்தக் காலகடட்டத்தில் அதை எந்த வழியிலாவது அபகரித்து கள்ளச் சந்தையில் விற்றுவிட இன்னொரு தொகையினர் அலைகின்றார்கள்.இன்று 1.37 பில்லியனைத் தொட்டு தினம் தினம் ஏறிக் கொண்டிருக்கும் சீன ஜனத்தொகையில் 80 வீதமானவர்களுக்கு தந்தத்தில் செய்த ஏதோவொரு பொருளை அளவில் சிறியதாக இருந்தாலும் சொந்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற ஆசை மேலோங்கி இருக்கின்றது. இந்த நிலையில் 500 000 யானைகளின் தந்தங்கள் எங்ஙனம் சீனர்களின் தேவைக்கு போதுமானதாக இருக்கப் போகின்றது?

கடைசி யானை கொல்லப்படும் வரை பேராசை பிடித்த மனிதர்கள் அவற்றைத் தேடியலையும் நிலைதான் யதார்த்தம்..

கைத்தொலைபேசிகள் ஆபிரிக்க கண்டத்தில் அதிக அளவு விற்பனையாகவேண்டும் என்பதற்காக உற்பத்தியாளர்கள் அவற்றின் விலையைக் கணிசமான அளவு குறைத்து பெருமளவு கைத்தொலைபேசிகளை சந்தையில் விநியோகித்தார்கள்.ஆனால் யானைகளின் தந்தத்தின் விடயத்தில் இது சாத்தியமா? தந்தங்களை சந்தையில் இருந்து முற்றாக ஒழிப்பதுதான் இதற்கு ஒருவழியாகத் தெரிகின்றது.ஆபிரிக்க நாடான கென்யா களவில் கொல்லப்பட்ட 6000 யானைகளின் தந்தங்களைச் சேகரித்து அண்மையில் எரித்தது உலகின் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளது. தந்தங்களை அழிக்கும் விடயத்தில் ஓர் அரசால் மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய அழிவு இதுவேயாகும். கென்ய ஜனாதிபதி உட்பட வேறு சில ஆபிரிக்க நாடுகளின் தலைவர்கள் சமூகமளிக்கஇ ஐ.நா.சபையின் உயர் அதிகாரிகள் சிலரும் அமெரிக்க அதிகாரிகள் சிலரும் இந்த தந்த எரிப்பு நிகழ்விற்கு பிரசன்னமாகி இருந்தார்கள். பல அமைப்புகள் அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்று வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தன. ஏறத்தாழ 105 தொன் எடையுடைய யானைத் தந்தம் 1.5 தொன் எடையுடைய காண்டாமிருகக் கொம்பு– இவைதான் 11 குவியல்களாக எரிக்கப்பட்டவை. இதுகாலவரையில் எரிக்கப்பட்ட தொகையை விட இது ஏழு மடங்கு தொகை என்கிறார்கள்.

இந்த செப்டெம்பரில் தெ.ஆபிரிக்காவில் காட்டு வாழ் உயிரினங்களை வைத்து செய்யப்படும் வியாபாரம் பற்றிய அகில உலக ரீதியான கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இந்தச் சந்திப்பின்போது யானைத் தந்த வியாபாரத்தை அடியோடு தடை செய்யும்படி கென்யா கோரவுள்ளது. இந்த வியாபாரம் அனுமதிக்கப்படும் வரையில் அப்பாவி யானைகளின் பாடு திண்டாட்டந்தான் என்று இவர் குறிப்பிட்டுள்ளார். 2008க்கும் 2013க்கும் இடைப்பட்ட காலத்தில் 30 000 தொடக்கம் 500, 000 வரையிலான யானைகள் கொல்லப்பட்டு வந்துள்ளதாக Born Free என்ற அமைப்பு கூறியுள்ளது. கொல்லப்படும் அளவு ஆபிரிக்க காடுகளில் யானைகள் பிறக்கும் அளவை விட அதிகம் என்றும் இந்த அமைப்பு சுட்டிக்காட்டத் தவறவில்லை. இறப்பின் அளவு பிறப்பின் அளவை மிஞ்சுவதால் இறுதியில் யானைகளே எஞ்சாது என்பதே இன்றைய நிலைமை. 1989இல் கென்யா முதற் தடவையாக யானைத் தந்தத்தை எரித்தது. 90 வீதத்தால் குறைந்து விட்ட யானைகளின் தொகையைக் கட்டுப்படுத்தவே அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டது. இந்தக் காலட்டத்திற்கு 15 வருடங்களுக்கு முன்பு 16800 ஆக இருந்த யானைகளின் தொகை வெறும் 15,000 ஆக அருகியிருந்தது. ஆபிரிக்க கண்டத்தில் காணப்படும் யானைகளின் தொகையில் பாதிக்கு மேற்பட்டவை கென்யா Gabon, உகண்டா பொட்ஸ்வானா ஆகிய ஆபிரிக்க நாடுகளிலேயே காணப்படுகின்றன. ஏற்கனவே குறிப்பிட்ட செப்டெம்பர் மாநாட்டில் இந்த நாட்டுத் தலைவர்களும் யானைத் தந்த வியாபாரத்தை தடை செய்யும் பிரேரணையை முன்வைக்க இருக்கின்றார்கள். மலேசியா ஹொங்ஹொங் அரபு எமிரேட்ஸ் உட்பட ஒரு டசின் நாடுகள் பகிரங்கமாக இப்படி யானைத் தந்தங்களை எரித்துள்ளன. இதனால் இதன் சந்தை வீழ்ச்சி காண வாய்ப்பிருக்கின்றது. சட்டரீதியாகவோ அல்லது களவாகவோ செய்யப்படும் தந்த வியாபாரம் இந்த நடவடிக்கை மூலம் ஆட்டங்காண ஆரம்பித்து விடும். சட்டரீதியாக யானைத்தந்தத்தை விற்பது




என்பது எல்லாவழியிலும் பிழைத்துப் போயிருக்கின்றது. எவராக இருந்தாலும் இந்த வியாபாரத்திற்கே தடை போடுவது நல்ல பலனைத் தரலாம் என்கின்றார் வன விலங்குகளை அழிவிலிருந்து மீட்க போராடும் ஓர் அமைப்பின் அதிகாரி.

யானைத் தந்தம் காண்டா மிருகத்தின் கொம்பு புலித்தோல் போன்றன சில வேளைகளில் சீனாவில் மருத்துவரீதியாகப் பயன்படுகின்றன. ஆனால்சில ஆசிய நாடுகளில் பெரிய இடத்துப் பரிசுப் பொருளாக யானைத் தந்தம் மாறியிருப்பதே பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. பெருந்தொகையினர் பரிசுப் பொருளாக தந்தத்திலான பொருட்களைத் தேடத் தொடங்கி இருக்கின்றார்கள். சீனா இப்படியான பரிசளிப்புகளை அங்கீகரிப்பதில்லை. இதன் எதிரொலியாக உள்நாட்டு யானைத் தந்த சந்தையை இழுத்து மூடும் நடவடிக்கையில் அரசு இறங்கியிருக்கின்றது. யானைத் தந்தத்திற்கான சந்தையை அடியோடு ஒழிப்பதுவே எம் குறி என்கிறார்கள் அதிகாரிகள். ஆனால் இது எவ்வளவு காலம் எடுக்கப் போகின்றது என்பதே கேள்விக்குறி. வருடாவருடம் 10, 000 வரையிலான யானைகளை இழக்கின்றோம். இந்த நிலை மேலும் தொடரக் கூடாது என்று விசனத்தோடு குறிப்பிடுகிறார் ஓர் அமைப்பின் அதிகாரி. இந்த அளவு பெரிய தொகை யானைத் தந்தத்தை பொது இடத்தில் வைத்து எரித்து அழித்ததன் மூலம்இ களவில் வந்த யானைத் தந்தங்களை அரசு எந்த விதத்திலும் ஏற்காது பயன்படுத்தாது என்ற செய்தியை முழு உலகிற்கும் கொடுத்துள்ளது கென்யா. என்றாலும் கென்யா எரித்தது அநியாயம் என்று சொல்லும் பேர்வழிகளும் இருக்கின்றார்கள்.இந்தப் புள்ளி விபரத்தைக் கவனியுங்கள். கடந்த தசாப்த காலத்தில் யானைகளின் தொகை 62 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. அடுத்த ஒரு தசாப்த காலத்தில் அழிந்து போன மிருகங்கள் பட்டியலில் யானையும் வந்து விடலாம். தந்தம் உடலின் அவயவங்கள் மாமிசம் போன்றவற்றிற்காக தினமும் 100 யானைகள் வரையில் களவாகக் கொல்லப்பட்டு வருகின்றன.இப்பொழுது எஞ்சியிருப்பது சுமாராக 40,000 யானைகள் மாத்திரமே! 2011க்கும் 2014க்கும் இடைப்பட்ட காலத்தில் தந்தத்தின் விலை மும்மடங்காக எகிறிப் பாய்ந்துள்ளது. ஆசியாவிலோ 13 நாடுகளில்தான் யானைகள் காணப்படுகின்றன. ஆபிரிக்க காடுகளில் காணப்படும் தொகையில் பத்திலொரு வீதமே இங்கு காணப்படுவதால் அழிவின் விளிம்பில் உள்ள விலங்குகளாக ஆசிய யானைகள் மாறிவிட்டன.அழிகின்ற யானைகள் பற்றிய கதை சொல்கின்ற இந்த வேளை வாழ்கின்ற யானைகளின் வாழ்வியல் முறை பற்றியும் சில வரிகளாவது சொல்வது அவசியமாகின்றது. நல்ல அனுபவசாலியான ஒரு யானையின் தலைமையில் பெண் யானைகள்– ஏறத்தாழ பத்து யானைகள் ஒரு கூட்டமாக வாழ்கின்றன. ஆண் யானை காலத்திற்குக் காலம் தன் கூட்டத்தை மாற்றிக் கொள்வதுண்டு. ஒரு யானைக்கு நோய் வந்துவிட்டால் அக் கூட்டத்திலுள்ள ஏனைய யானைகள் நோயாளி யானைக்கு உணவு தேடித் தந்து பராமரிக்கின்றன. மனிதர்களைப் போல ஒரு யானை இறந்து விட்டால் பெரிதாக ஆழமில்லாத குழியை அகழ்ந்து உடலை அதற்குள் விழுத்தி மண்காய்ந்த சருகுகளால் மூடுகின்றன. தமது கூட்டாளியின் இழப்பையும் முகத்தில் வெளிப்படுத்துகின்றன. இந்தப் பாரிய விலங்கின் மூளையினது எடை 5 கிலோ. நகைச்சுவை, சுய அக்கறை,சோகம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தும் பகுதி இதன் மூளை யில் உண்டு. எங்காவது பூட்டி வைத்தால் இதன் தும்பிக்கை கதவின் பூட்டைத் திறக்குமளவிற்கு வளைந்து கொடுக்கும். 2014இல் காண்டாமிருகத்தின் கொம்பின் சந்தை மதிப்பு கிலோ 60,000 டாலராக இருந்துள்ளது. யானைத் தந்தம் இதே ஆண்டில் கிலோ 2412 டாலர்.இப்படி ஒரு விலையில்இபாவம் இந்த மிருகங்களை யார்தான் விட்டு வைக்கப் போகிறார்கள்?




# மன அழுத்தத்தால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்களே

மனஅழுத்தத்தால் அதிகம் பாதிக்கப்படுவது ஆண்களை விட பெண்களே அதிகம். பெண்கள் காலையில் வேலைக்கு செல்லும் அவசரத்தில் பரபரப்பாக இருப்பார்கள். அவர்களின் டென்ஷனை குறைக்க சில எளிய வழிமுறைகள்.



* காலையில் பதினைந்து நிமிடங்கள் முன்னதாகவே எழுந்து விடுங்கள்.
* எங்கேயாவது செல்லவேண்டியிருந்தால் அதற்குரிய ஆடைகள், பொருட்களை முன்கூட்டியே எடுத்து வைத்துக் கொள்ளுங்கள்.
* ஒரு காகிதத்தில் அன்றைய தினம் செய்ய வேண்டிய பணிகளையும், எப்போது செய்யப் போகிறோம் என்பதையும் குறித்து வையுங்கள்.
* காத்திருபது சிரமம் என்று கருதாதீர்கள். ஒரு புத்தகத்தை கையில் வைத்திருப்பது காத்திருத்தலை சுகமாக்கும். தேவையற்ற மன அழுத்தத்தைக் குறைக்கும்.
* வேலைகளைத் தள்ளி வைப்பது மன அழுத்தத்தை அதிகரிக்கும். செய்ய வேண்டியதை தாமதப்படுத்தாமல் செய்யுங்கள்.
* முன்கூட்டியே திட்டமிடுங்கள். எதையும் கடைசி நேரம் வரை காத்திருந்தபின் செய்வதைத் தவிருங்கள்.
* சற்று முன்கூட்டியே செல்ல பழக்கப்படுங்கள். பத்து நிமிடத்தில் செல்ல முடிந்த இடத்துக்கு இருபது நிமிடத்திற்கு முன்பாகவே புறப்படுங்கள்.
* சில மாற்று யோசனைகளைக் கைவசம் வைத்திருங்கள். உதாரணமாக பஸ் தாமதமானால் இதைச் செய்வேன்? என்பது போன்றவை.
* தவறாய் போன ஒரு விஷயத்தைக் குறித்து சிந்தித்துக் கொண்டே இருப்பதை விட, சரியாய் நிகழ்ந்த பலவற்றைக் குறித்து அடிக்கடி நினைத்து மகிழுங்கள்.
* செல்லும் இடங்கள் புதிய இடங்களாக இருந்தால் வழியை முதலிலேயே தெளிவாகக் கேட்டு வைத்துக் கொள்ளுங்கள்.
* சற்றுநேரம் கைபேசிகளையும்,தொலை பேசிகளையும் அணைத்து விடுங்கள். ஓய்வு எடுங்கள் எந்த தொந்தரவுமின்றி.
* உணவு, உடை, உறைவிடம் தவிர்த்த எதுவும் உங்களை மன இறுக்கம் கொள்ளச் செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள். முன்னுரிமை எதற்குக் கொடுக்க வேண்டும் என்பதில் தெளிவு அவசியம்.




இண்டோலியம் வாணலிகளில் எதை வைத்துதேய்த்தும்வெளுப்பதில்லை. இதை வெளுக்க இரசாயன பவுடர் எதுவும் இருக்கிறதா? அல்லது சுலபமான ஒரு முறையை விளக்க முடியுமா?

எந்தப் பாத்திரத்தையும் தேய்க்க, டிஸ்வாஸ் பவுடரில் இருக்க வேண்டிய இரண்டு அம்சங்கள் சுத்தம் செய்யும் தன்மை. மற்றொன்று பிசுக்கு அழுக்குகளை நீக்கும்தன்மை. தரமான பவுடர்களில் நிச்சயம் இவை இருக்கும். அப்படியும் போகவில்லையென்றால், இத்துடன் கொரகொரப்பான சாம்பல் உபயோகிக்கலாம்.

மைதா மாவால் சமோசா செய்து பத்து நிமிடம் ஆகிவிட்டால், மொறுமொறுப்பு போய் விடுகிறது. ஆனால் கடைகளில் எப்போதும் மொறுமொறுப்பாக இருக்கிறதே. காரணம் என்ன?

சமோசா செய்ய மைதா மாவை டால்டா அல்லது எண்ணெய் சேர்த்து, நன்றாகப் பிசைந்து ஊற வைத்துக் கொள்ளவேண்டும். பிசையும் போது ஐஸ் தண்ணீர் விட்டு பிசையவும். பிறகு மெல்லியதாக சமோசா செய்வதற்கு ஏற்ற வடிவில் இட வேண்டும். மேலே கூறியதில் சிறிது மாறினாலும், சமோசா நமுத்துப் போய் விடும்.



## வாரமொரு குறள்

*குறள் 31:*

*சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு.*

**பொருள் :**

**சிறப்பையும், செழிப்பையும் தரக்கூடிய அறவழி ஒன்றைத்தவிர ஆக்கமளிக்கக் கூடிய வழி வேறென்ன இருக்கிறது?**

## குட்டீஸ் பக்கம்



## வீடில்லாதவர்களுக்கு நிதி சேகரிக்கும் சிறுவன்



கனடா நாட்டில் அல் பெர்ட்டா மாகாணத்தில் உள்ள ∴போர்ட் மெக்முர்ரி என்ற நகரு க்கு அருகில் உள்ள காட்டில் தீ விபத்து ஏற்பட்டு கடந்த ஒரு வாரமாக எரிந்துகொண்டு வருகிறது. காட்டுத்தீ குறித்து செய்திகள் மூலம் அறிந்த அலெக்ஸாண்டர் என்ற 5 வயது சிறுவன் உடனடியாக தனது தாயாரின் உதவியுடன் Whitby நகருக்கு அருகில் உள்ள ஷொப்பிங் கட்டிடத்திற்கு சென்று அங்கு எலுமிச்சைப் பழச்சாறு தயாரித்து அங்கு வருபவர்களுக்கு விற்பனை செய்துள்ளான். சிறுவனுக்கு 2,600 டொலர் வரை நிதி கிடைத்துள்ளது. இந்த தொகை முழுவதும் கனடா செஞ்சிலுவை சங்கத்திற்கு அனுப்பப்பட்டு வீடில்லாமல் இருப்பவர்களுக்கு வழங்கப்படும்.

## மருந்து



பென்சிலின்
மருந்தைக்
கண்டு பிடித்த
அலெக்சாண்டர்
∴ப்ளெமிங்கிற்கு நோபல் பரிசு
வழங்கும் விழா! விழாவில்
∴ப்ளெமிங் இருமிக்கொண்டே
இருந்தார். கைக்குட்டையை
வாயருகில் வைத்துக் கொண்டு
இருமலைக் குறைக்க
முயற்சித்துக் கொண்டிருந்தார்.
அவரால் இருமலைக்
கட்டுப்படுத்த முடியவில்லை!
இடைவிடாது
இருமிக்கொண்டிருந்தார்.
அவரிடம் ஒரு நபர்
காய்ச்சலுக்கு ஒரு நல்ல
மருந்து கண்டுபிடித்
திருக்கக் கூடாதா?
என்று
கிண்டலடித்தார்.

## தேங்காய் ஓட்டில் அழகான ஸ்டாண்ட்



மேசை மீது வைத்திருக்கும் அழகிய பேனா ஸ்டாண்டைப் பார்த்திருப்பீர்கள். அதைப் போன்ற ஒரு பேனா ஸ்டாண்டை தேங்காய் ஓட்டை வைத்து செய்யலாம், தெரியுமா?

**தேவையான பொருள்கள்:**

மூன்று கண்களைக் கொண்ட பாதி தேங்காய் ஓடு (வண்ணக் காகிதத் துண்டுகள் சில, சிறிய விலங்குகளின் படங்கள், கத்தரிக்கோல், பசை.

**செய்முறை:**

1. தேங்காய் ஓட்டின் மேல் பகுதியிலுள்ள நார்களை நன்றாக உரித்து, சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள். ஓட்டின் மேல் உள்ள கண்கள் பகுதியில் துளையிட்டுக் கொள்ளுங்கள்.

2. இப்போது தேங்காய் ஓடு முழுவதும் நன்றாகப் பசையைத் தடவிக்கொள்ளுங்கள். பின்னர் வண்ணக் காகிதத் துண்டுகளை ஓட்டின் மீது நன்கு ஒட்டிக்கொள்ளுங்கள்.

3. அடுத்ததாக, வெட்டி வைத்திருக்கும் சிறிய விலங்குகளின் படங்களை தேங்காய் ஓட்டின் மீது ஒட்டிக்கொள்ளுங்கள்.

4. இப்போது தேங்காய் ஓட்டின் வட்ட வடிவமான பகுதியை மேசை மீது வைத்துவிட்டு மேலே தெரியும் துளைகளில் பேனாக்களை நுழைத்து பேனா ஸ்டாண்டாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

ஆன்மீகம்



# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்



இலங்கையில் காணப்படும் இந்து திருத்தலங்களில் மிகவும் பழமையும் தொன்மையும் வாய்ந்த திருத்தலமாக மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில் காணப்படுகிறது. மாவிட்ட்புரம் கந்த சுவாமி கோவில் இலங்கையின் வடபாகத்தில் காணப்படுவதுடன் யாழ் - காங்கேசன்துறை வீதியில் சுமார் 9 மைல் தொலைவில் உள்ளது. இக்கோவிலின் வரலாறும், இவ்வூருக்குப் பெயர் வந்த வரலாறும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றன. 7ம் நூற்றாண்டில் இந்தியாவில் தமிழ் நாட்டில் மதுரை எனும் இடத்தை ஆட்சி புரிந்த உக்கிரப்பெருழகி மன்னனின் மகள் மாருதப்புரவல்லி. இவ் அரசி குதிரை முகத்துடன் காணப்பட்டதுடன் குண்ம நோயினாலும் வருந்தினாள். எல்லா வகையான வைத்தியர்களும் வைத்தியம் செய்தும் இவளுடைய நோய் தீர வில்லை. சாந்தலிங்க முனிவருடைய வழிக்காட்டலின் கீழ் அரசி கீரிமலைப் புனிதத் தீர்த்தத்தில் நீராடி மாவிட்டபுரத்தில் கோவில் கொண்டருளியிருக்கும் முருகப்பெருமானை வழிபட்டு வரும் காலத்தில் முருகன் அருளால் அவள் குதிரை முகம் நீங்கி மகா பேரழகு பெற்றதாக வரலாறு கூறுகிறது.. அதன் காரணத்தால் இவ்வூருக்கு மாவிட்டபுரம் (மா+விட்ட+ புரம்) என்ற பெயர் ஏற்பட்டது என்பது வரலாற்று ஆசிரியர்களின் கருத்தாகும்.

இங்கு மா எனக்குறிப்படப்பட்டது குதிரை எனப்பொருள் கொள்ளப்படுகிறது.இதன் காரணமாக மகிழ்ச் சியடைந்த இளவரசி மதுரையில் இருந்து ஆலயத்தை நிர்மாணிப்பதற்காக சிற்பாசிரியர்களையும் பொருட்களையும் கொண்டுவந்து மாவிட்டப்புரம் கந்தசுவாமி ஆலயத்தை நிர்மாணித்தர். விக்கிரகங்கள் உரிய முறையில் பிரதிஸ்டை செய்யப்பட்டு கி. பி. 1795 ஆம் ஆண்டு ஆனி உத்திர நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் சிறப்புற இடம்பெற்றது. மாவிட்டபுரம் கந்தக்கடவுள் அருளிலே இக்கோயில் ஆதினகர்த்தர் இறையடி சேர்ந்த மகாராஜ் ஸ்ரீ.சு.து. ஷண்முகநாதக் குருக்கள் அவர்கள் சிதம்பரம் அந்தணர் தில்லை மூவாயிரவர் குடும்பத்தைச் சேர்ந்தவராய் சோழராசாவால் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு முதலாவது ஆதினகர்த்தராக நியமிக்கப்பட்ட பெரிய மனத்துள்ளாரின் உத்தேசமாக நாற்பதாவது பேரனாக அறியப்படுகின்றனர் போர்த்துகேயர் இலங்கை மீது படையெடுத்து இலங்கையை கைப்பற்றிய வேளையில் மத மாற்றும் முகமாக இந்து ஆலயம் அழித்து தேவாலயங்களை நிர்மாணித்தார்கள். அப்போது மாவிட்டப்புரம் கந்தசுவாமிகோவிலும் அழிக்கப்படது. அவ்வேளையில் ஆலயத்தில் இருந்த கந்தசுவாமி திருவுருவத்தை மக்கள் கிணறு ஒன்றினுள் மறைத்து வைத்தார்கள். போர்த்துகேயர் ஆட்சி முடிந்து ஒல்லாந்தர் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டதைதொடர்ந்து ஆலயம் புனரமைப்பு செய்யப்பட்டு மீண்டும் கந்தசுவாமியின் சிலை ஸ்தாபிக்கப்பட்டு வழிபாடு இடம்பெற்றது. இடைக்காலத்தில் மூலஸ்தானத்தில் வேல் வைத்து வழிபாடு இடம்பெற்றது. இன்றும் கூட கந்தசுவாமி வழிப்படுடன் மூலஸ்தானத்தில் வேலும் வைக்கப்பட்டு வழிபடுவதையும் காணலாம். முருக பக்தரான மறைந்த கிருபானந்த வாரியார் இலங்கை வந்தபோதெல்லாம் ஒரு முறை கூட மாவிட்டபுரத்துக் கந்தனை தரிசிக்காமல் சென்றதில்லை என அவரே சொல்லியிருக்கின்றார்.



# சந்தர்ப்பவாதிகள்

## அத்தியாயம்- 2

சித்திரவேல் வீடு யாழ்ப்பாணத்திலுள்ள மானிப்பாயில்தான் இருக்கிறது. முப்பது வயதை எட்டிவிட்ட தன் மகன் சத்யனுக்கு இன்று பெண் பார்ப்பதாக இருக்கின்றார் .ஏற்கனவே இரண்டு தடவைகள் பார்த்த பெண்களை அவருக்கும் பிடிக்கவில்லை. அவர் மனைவிக்கும் பிடிக்கவில்லை. இன்று பார்க்க இருக்கும் பெண் ஒரு பட்டதாரி. ஆசிரியையாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறாள். அவள்தான் குடும்பத்தில் ஒரு பிள்ளை. வயது இருபத்தெட்டாகின்றது. குறிப்புக்ளைப் பரிமாறிக் கொண்டதில் ஜாதகப் பொருத்தம் நன்றாக வந்திருக்கின்றது. இந்தப் புதுச் சம்பந்தம் பற்றி சத்யனிடம் மூச்சு விடவில்லை. பெண்ணை நேரில் பார்த்துப் பேசிவிட்டு, சத்யனுக்குத் தெரிவிக்கலாம் என்று தகப்பன் நினைத்திருந்தார். இணுவிலில்தான் பெண் குடும்பம். அப்பா ஓய்வு பெற்ற ஆசிரியர்.

சித்திரவேலுக்கும் சத்யசீலன்தான் ஒரு பிள்ளை. இனிப் பிள்ளை கிடைக்காதோ என்று பல வருட ஏக்கம், காத்திருப்பு என்று சுசீலாவிற்குக் கிடைத்தவன்தான் சத்யன். இலண்டனில் படிக்கின்ற தன் மகனுக்கு ஒருத்தியைக் கட்டிக் கொடுத்து விட்டால் தன் உயிர் நிம்மதியாகக் கட்டையில் வேகும் என்று நினைத்தார் நோயாளியாகி விட்ட சித்திரவேல். அவருக்கும் வருகிற தையில் வயது எழுபதைத் தொடப்போகின்றது.

யாழ்பாணத்தவர்களுக்கு எழுபதுக்கு பிறகு ஆரோக்கியமாக இருப்பது என்பது சிரமமான காரியந்தான். எண்பது தொண்ணூறு வயது வரை வாழ்வது முக்கியமல்ல. எமது உடம்பு மற்றவர்களுக்குப் பாரமாக இல்லாமல் வாழ முடிவதுதான் முக்கியம். நமது உடம்பு நமக்கே பாரமாகி விடும்போது, எதற்கெடுத்தாலும் அடுத்தவரிடம் தங்கியிருக்கும் நிலை வந்துவிடுகின்றது.

சித்திரவேல் மனைவியுடன் ஓட்டோ பிடித்து இணுவில் நோக்கிப் புறப்பட்டார். இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலடியில்தான் வீடாம்.

வீட்டைக் கண்டு பிடிப்பது அப்படியொன்றும் சிரமமாக இருக்கவில்லை. வீடு பெரிதாக இல்லைத்தான். ஆனால் அழகாக இருந்தது. வீட்டு முற்றத்து பூச்செடிகள் வீட்டுக்கு ஒரு தனி அழகைக் கொடுத்தன.

வாசலில் நின்று பெண்ணின் பெற்றோர் மலர்ந்த முகத்தோடு வரவேற்றார்கள். வீட்டுக்குள் நுழைந்தபோது அதன் நேர்த்தியைக் கண்டு மனதுக்குள் வியந்தார் சிததிரவேல். இருபகுதியினரும் பரஸ்பரம் சுகம் விசாரித்துக் கொண்டார்கள். பொதுவான விடயங்களைப் பகிர்ந்து கொண்டார்கள்.

"உமா...." பெண்ணின் தந்தை மகளை அழைத்தார்.

ஒரு தட்டில் குளிர்பான டம்ளர்களுடன், தழையத் தழைய சேலை உடுத்தியபடி, ஓர் உயரமான, நல்ல உடல்வாகு கொண்ட, அழகிய பெண்ணொருத்தி சிரித்த முகத்தோடு அவர்களுக்கு வணக்கம் சொல்லி விட்டு, தாயின் பக்கததில் ஒருக்களித்து நின்றாள்.

"வணக்கம் அம்மா" என்றார்கள் மாப்பிள்ளையின் அப்பாவும் அம்மாவும் ஒரே குரலில்!

அடடா இந்தப் புன்னகை என்பது ஒரு பெண்ணுக்கு எவ்வளவு வசீகரத்தைக் கொடுத்து விடுகின்றது. கழுத்து நிறைய எவ்வளவு பொன்நகையிருந்தாலும் இந்தப் புன்னகை இவற்றையெல்லாம் ஓரங்கட்டிவிடுகின்றதே என்று மனதுள் நினைத்து வியந்த சித்திரவேல், அழகான பெண்தான் என்று மருகளுக்கு ஒரு பாராட்டும் கொடுக்கத் தவறவில்லை.

"உட்காரம்மா...."

இந்தத் தடவை அன்புக் கட்டளை சத்தியனின் அம்மாவிடமிருந்து வந்தது. உமாவும் புன்முறுவலோடு, தன் தாய்க்குப் பக்கததிலிருந்த கதிரையில் அடக்கமாக உட்கார்ந்தாள்.

பெண்ணோடு மெல்ல மெல்லப் பேச்சு ஆரம்பமாகியது.

முதலில் சற்றே வெட்கப்பட்டவள், பின்பு சினேகிதமாகப் பேச ஆரம்பித்தாள். அவளைப் பெண் பார்க்கும் நாலாவது குடும்பம் இது. ஏற்கனவே வந்த மூன்று குடும்பத்தவர்களும் தன்னை ஒதுக்கி விட்டார்களே என்ற எந்த வெறுப்புணர்வையும் வெளிப்படுத்தாமல், நட்புடன் கேட்ட கேள்விகளுக்குப் பொறுமையாகப் பதில் தந்தாள்.

" உமா உமக்கு இலண்டன் போக விருப்பந்தானே" ?

தனக்கு ஆங்கிலத்தில் நல்ல புலமையுண்டு என்ற உமா, தன் ஆசிரியர் பணியை வாய்ப்புக் கிடைத்தால் வெளிநாட்டிலும் தொடர தனக்கு ஆசையுண்டு என்று சித்திரவேலிடம் தன் மனஆதங்கத்தை அவள் வெளிப்படுத்தத் தவறவில்லை. ஏற்கனவே மாப்பிளை வீட்டார் தந்த சத்யனின் போட்டோவை அவள் பார்த்திருந்தாள். அவளுக்கு மாப்பிள்ளை வீட்டாரைப் பிடித்திருந்தது. வசீகரனாகப் போட்டோவில் தெரிபவன் வசீகரமான குணங்களைக் கொண்டிருந்தால் தனக்கு அதிஸ்டந்தான் என்று அவள் மனதுக்குள் எண்ணியிருந்தாள்.

"இலண்டனில இவருக்கு வேலை கிடைக்குமா"?

"தெரியல்லைப் பிள்ளை. டிகிரீ முடிச்சிட்டான். இனி அங்க வேலை கிடைக்குமா எண்டு தெரியாது. ரெலிபோனில கேட்டா , இங்க எதுவும் நடக்கலாம் அப்பா. மாற்றம் என்பதுதான் மாறாதது எண்டு வேதாந்தம் பேசுவான். சரி உமா உங்களுக்கு எந்தப் பள்ளிக்கூடத்தில வேலை" ?

"உடுவில் பெண்கள் பாடசாலை யில்தான்".

"அட எங்களுக்குப் பக்கத்திலதான் வேலை செய்யிறியள்போல கிடக்கு. தினமும் பஸ்ஸிலதான் போறனீயள்போல..."

"இல்லை அங்கிள்.. என்னட்ட ஒரு ஸ்கூட்டர் இருக்கு..."

" ஓ அதுதானே பார்த்தன்... இப்ப தெரு நிறைய அதுகள் தானே ஓடுது. கார்ப்பற் றோட்டு எண்டு சீனாக்காரன் றோட்டை வடிவாக்கிப் போட்டுப் போயிருக்கிறான். அதுக்குப் பிறகு யாழ்ப்பாணத்தில அக்ஸிடென்டுகளுக்கு பஞ்சமில்ல பிள்ளை."

அநியாயச் சாவுகளை ஆதங்கத்தோடு சுட்டிக்காட்டி கவலைப்பட்டார் சித்திரவேல்!

"நீங்க சொல்லுறதும் சரிதான். ஆனால் இதையெல்லாம் பார்த்தா எங்களைப் போல பெண்கள் படிச்சுப் போட்டு, வீட்டுக்கிள இருக்க வேண்டியதுதான் அங்கிள்."

உமா சொல்வது நியாயமாகப் பட்டது அவருக்கு. உமாவையும் அவருக்குப் பிடிததிருந்தது. மகனுக்கும் பிடிக்க வேண்டுமே. நீங்கள் பெண்ணைப் பாருங்கள். உங்களுக்குப் பிடித்த குணசாலியாக இருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சத்தியன் சொல்லியிருந்தான். என்றாலும் அவன் விருப்பத்தின் முடிவில்தான் எதையும் செய்யலாம்.

மகள்தான் செய்தாள் என்று சொல்லி வடையைத் தட்டில் நீட்டினார்கள். நன்றாகத்தான் இருந்தது. தேநீரும் அருந்தி முடித்த போது , சத்தியனின் பெற்றோருக்கும் மனது நிறைந்திருந்தது.

நாங்கள் விரைவில் தொடர்பு கொள்ளுகிறோம் என்று சொல்லிவிட்டு, இருக்கையில் இருந்து எழுந்தார் சித்திரவேல். வாசல்வரை எல்லோரும் வந்து வழியனுப்பினார்கள். மறுபடியும் ஓட்டோவொன்றை மறித்து, அதில் சித்திரவேல் தன் மனைவியுடன் ஏறிக் கொண்டார்.

சற்றுத் தூரம் சென்றதும் சற்றே செருமியபடி, மனைவி சுசீலாவிடம் பேச்சுக் கொடுத்தார் சித்திரவேல்...

**ஏ.ஜே.ஞானேந்திரன்**

"என்ன சுசீ உனக்கு உமாவைப் பிடிச்சிருக்கா"?

"ரொம்ப.." முகம் நிறையச் சிரிப்போடு சுசீலாவிடமிருந்து பதில் வந்தது.

" பிறகென்ன? பாதிக்கிணறு தாண்டிய மாதிரித்தான்......."

"அதென்ன பாதிக்கிணறு........"?

"சத்தியன் சம்மதிக்க வேணுமே சுசி"

"எனக்கென்னமோ நம்மிட பொடிய னுக்கு பொருத்தமான ஒரு பொடிச்சி கிடைச்சிட்டாள் போலத்தான் கிடக்கு.."

"உன்ர வாயில ஒரு கிலோ சர்க்கரை போடவேணும் போல கிடக்கு சுசி" மன நிறைவான சிரிப்பு அவரிடமிருந்து வெளிப்பட்டது.

அட வீடு அதற்குள் வந்து விட்டதா.

"தம்பி ஓட்டோவை அந்த மதில் வீட்டு கேட்டடியில் நிறுத்து"

ஓட்டோ வீட்டு வாசலில் நிற்க இருவரும் அதிலிருந்து இறங்கினார்கள்"..

(தொடரும்)

# 14 வயது சிறுவனின் அசாத்திய கண்டுபிடிப்பு

மூன்று கோடி டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் 390 கோடி ரூபா) அளிப்பதாகக் கூறியபோதிலும், தனது கண்டுபிடிப்பைப் பெருநிறுவனத்துக்கு விற்க மறுத்த சிறுவன் அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளான்.

பணப்பட்டுவாடா செய்யும் வங்கி ஏ.டி.எம். கள் போல முதலுதவிச் சிகிச்சைக்கு உதவும் மருந்துப் பொருள்களை வழங்கும் இயந்திரத்தை ரெய்லர் ரோஸன்தால் என்கிற 14 வயதுச் சிறுவன் உருவாக்கினான். அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தைச் சேர்ந்த இந்த சிறுவன் உருவாக்கிய இயந்திரத்தில் தீக்காயம் உள்ளிட்ட காயங்களுக்கான முதலுதவி மருந்து, பிளாஸ்திரி, பேண்டேஜ் துணி, இறப்பர் கையுறை ஆகியவற்றை பணம் செலுத்திப் பெறலாம்.

பேஸ்போல் விளையாட்டின்போது தனது நண்பர்கள் காயமடைவதைப் பார்த்ததும் இது போன்ற இயந்திரத்தை உருவாக்கி, விளையாட்டு மைதானங்களில் வைப்பது குறித்த யோசனை அச்சிறுவனுக்கு எழுந்தது. காசு போட்டால் முதலுதவி சாதனங்கள் அளிக்கும் இயந்திரத்துக்கான வடிவத்தை தனது வகுப்பில் செயல்முறைப் பாடத்தின் கீழ் அளித்தான். பின்னர், முழு அளவில் ஒரு இயந்திரத்தை அவன் உருவாக்கினான். அந்தக் கண்டுபிடிப்புக்கான காப்புரிமையையும் அவன் பெற்றுள்ளான்.இந்த நிலையில், மருந்து தயாரிப்பில் ஈடுபட்டுள்ள பெரு நிறுவனம் அந்த இயந்திரத்துக்கான உரிமையை வாங்க முன்வந்தது.அதற்காக 3 கோடி டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் 390 கோடி ரூபா) வரை அளிப்பதாகக் கூறியது. ஆனால் அந்த இயந்திரத்துக்கான உரிமையைப் பெரு நிறுவனத்துக்கு விற்க ரெய்லர் ரோஸன்தால் மறுத்துவிட்டான்.இதுவரையில் தனிப்பட்ட முறையில் சுமார் ஒரு கோடியே 60 லட்சம் திரட்டியுள்ள இந்தச் சிறுவன், அந்த இயந்திரத்துக்கான காப்புரிமையை யாருக்கும் அளிக்கப் போவதில்லை எனக் கூறியுள்ளான். விளையாட்டுத் திடல்கள், பொழுதுபோக்கு இடங்கள், வணிக வளாகங்கள், கல்விக் கூடங்கள், சுற்றுலாத் தலங்கள் உள்ளிட்ட இடங்களில் தனது கண்டுபிடிப்பைத் தானே நேரடியாக நிறுவத் திட்டமிட்டுள்ளான். ஸிக்ஸ் ஃபிளாக்ஸ் என்னும் கேளிக்கைப் பூங்கா 100 இயந்திரங்களுக்காக முற்பணம் அளித்துள்ளது.

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ஜெயலலிதா மீண்டும் ....

அதே நேரத்தில் கேரளாவில் உம்மன் சாண்டி தலைமையில் இருந்த காங்கிரஸ் கட்சி படுதோல்வி அடைந்துள்ளது. அங்கே மாக்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சி தலைமையிலான இடது சாரிகள் 140 உறுப்பினர்களை கொண்ட கேரளா சட்ட சபை 88 இடங்களை பெற்று வெற்றி பெற்றுள்ளது.

முன்னாள் கம்யூனிஸ்ட் கட்சி தலைவரான 92 வயதான அச்சுதானந்தன் மீண்டும் முதலமைச்சராகும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

கேரளாவில் முதல் முதலாக பி.ஜே.பி 1 தொகுதியில் வெற்றி பெற்றுள்ளது. 86 வயதுடைய பி.ஜே.பி தலைவர் ஒருவரான ராஜகோபால் கேரளா மாநிலத்தில் வெற்றி பெற்றுள்ளார். பிஜே.பி உறுப்பினரான கே. சுரேந்திரன் 87 வாக்குகளால் முஸ்லீம் லீக்கை சேர்ந்த அப்துல் ரசாக்கை மஞ்சேஸ்வர் தொகுதியில் தோல்வியடைய செய்துள்ளார்.

ஒரு காலத்தில் பால் சங்கத்தில் விற்பனையாளராக வாழ்கை ஆரம்பித்த திருணாமூல் காங்கிரஸ் தலைவி மம்தா பானர்ஜி வெற்றி பெற்றுள்ளார். முதலில் 2011 ஆம் ஆண்டு வெற்றி பெற்று ஈட்சியை மேற்குவங்கத்தில் அமைத்தபர் மம்தா பார்னஜி இம்முறை தேர்தலிலும் வெற்றி பெற்று தனது ஆட்சியை தக்க வைத்துள்ளார். அதே நேரத்தில் ஜெயலலிதாவின் தலைமையிலான அ.இ.அ.தி.மு.க கூட்டணி 134 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

தமிழகத்திலுள்ள 234 தொகுதிகளில் 232 தொகுதிகளில் வாக்கு பதிவுகள் நடைபெற்றது. மொத்தம் 74.26 சத வீதமான வாக்குகள் பதிவானது. இந்த தேர்தலில் 3776 வேட்பாளர்கள் களத்தில் இருந்தார்கள். அதில் ஜெயலலிதா சென்னை ஆர்கே நகரிலும் கருணாநிதி திருவாரூரிலும் 'உழுந்தூர்ப்பேட்டை தொகுதியில்' விஜயகாந்தும் பொன்னுரங்க தொகுதியில் பா.ம.க தலைவரான அன்பு மணி ராமதாசும் காட்டுமன்னார் தொகுதியில் தொல் திருமாவளவனும் போட்டியிட்டார்கள்.

தமிழகத்தில் வாக்கு எண்ணும் பணி சென்ற வியாழக்கிழமை தொடங்கியது. ஜெயலலிதாவின் அ.தி.மு.க கூட்டணி 1984 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஆட்சியில் இருந்த ஒரு கட்சி மீண்டும் தேர்தலில் தொடர்ந்து வென்று ஆட்சி பிடிப்பது இதுவே முதல்முறையாகும். தமிழகத்தில் எம்ஜி.ஆருக்கு அடுத்து புதிய சாதனையை ஜெயலலிதா படைக்கிறார்.

நடந்து முடிந்த சட்ட சபை தேர்தலில் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர் 92 வயதான மு. கருணாநிதி ஆவார்.

சென்னை ஆர்கே நகரில் அ.தி.மு.கவின் தலைவி ஜெயலலிதா தி.மு.கவை சேர்ந்த முத்துசோழனை விட 39545 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றுள்ளார். அதே நேரத்தில் 2015 ஆம் ஆண்டு அதே தொகுதியில் நடைபெற்ற இடைதேர்தலில் போட்டியிட்ட ஜெயலலிதா 1.5 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடதக்கது. இம் முறை வாக்கு வித்தியாசம் அரைவாசியாக குறைந்துள்ளது.

குளத்தூர் தொகுதியில் இரண்டாவது முறையாக போட்டியிட்ட ஸ்டாலின் 91,303 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

தமிழகம் முழுவதையும் பா.ஐ.க. வுக்கு ஆதரவாக வளர்க்க போவதாக கூறி வந்த வி.ஜே.பி. யின் தலைவி தமிழிசை சவுந்தராஜன் 19,167 வாக்குகளை பெற்று 3 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டார்.

தூத்துக்குடி ஒட்டபிராடத்தில் டாக்டர் கிருஸ்ணசாமி அதே அ.தி.மு.க வி. ராஜனிடம் 493 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியை தழுவினார்.

உழுந்தூர்ப்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட தே.மு.தி.க விஜயகாந் 3 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டார். அவர் 39,447 வாக்குகளை பெற்றார். அதே தொகுதியில் போட்டியிட்ட அ.தி.மு.க வேட்பாளர் குமரகுரு வெற்றி பெற்றார்.

நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் கடலூர் தொகுதியில் 12,497 வாக்குகளை பெற்று தோல்வியடைந்து 3 ஆம் இடத்திற்கு தள்ளப்பட்டார். இந்த தொகுதியில் அ.தி.மு.க எம். ரி. சம்பத் 70,922 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

பொன்னாகரம் தொகுதி வேட்பாளர் பா.ம.க. அன்புமணி 58,402 வாக்குகளை பெற்று தோல்வி அடைந்தார். அதே நேரம் தி.மு.க. வை சேர்ந்த இன்பசேகரன் 76,848 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

சினிமா நடிகர் சரத்குமார் 53,770 வாக்குகளை பெற்று தோல்வி யடைந்துள்ளார். திருச்செந்தூர் தொகுதியில் அவரை எதிர்த்து போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளர் அனிதா ராதாகிருஸ்ணன் 70,732 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

அதே நேரம் தி.மு.க. சார்பாக வேளச்சேரியில் போட்டியிட்ட வாகை சந்திரசேகரன் மற்றும் அ.தி.மு.க. சார்பாக திருவானையில் போட்டியிட்ட கருணாஸ் ஆகிய 2 சினிமா நடிகர்களும் வெற்றிபெற்றார்கள்.

விடுதலை சிறுதைகள் கட்சி வேட்பாளர் திருமாவளவன் காட்டுமன்னார் தொகுதியில் அ.தி.மு.க. முருகு மாறனிடம் 87 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

திருநெல்வேலி மாவட்ட நங்குநீரில் சட்ட பேரவையில் வசந்தகுமார் (வசந்தன் கோ உரிமையாளர்) 38,180 வாக்குகளை பெற்று எதிர்த்து போட்டியிட்ட அ.தி.மு.க. விஜயகுமாரை தோற்கடித்து வெற்றி பெற்றார்.

தமிழ் சட்ட சபை தேர்தலில் நெல்லை மாவட்ட தொகுதியில் போட்டியிட்ட அப்பாவும் 49 வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

இதே போல 13 பேர் ஆயிரத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெற்று தோல்வியை தழுவியுள்ளர்கள். மேலும் புதுச்சேரி மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலில் 30 உறுப்பினர் கொண்ட சட்ட சபைக்கு தி.மு.க. காங்கிரஸ் 17 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கிறது. அதே நேரம் ஆட்சியில் இருந்த என். ஆர். காங்கிரஸ் 8 தொகுதிகளிலும் அ.தி.மு.க. 4 தொகுதிகளிலும் மற்ற கட்சி 1 தொகுதியிலும் வெற்றி பெற்றுள்ளது.

## நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை

நாட்டில் சீரற்ற காலநிலை நீடித்து வருகிறது. கடைசியாக கிடைத்த தகவலின் படி 68 பேர் உயிரிழந்ததாகவும் 132பேர் காணாமல்போய் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் மண்சரிவு வெள்ளப் பெருக்கினால் 42,561 பேர் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். மண் சரிவு வெள்ளப் பெருக்கு காற்றினால் 354 வீடுகள் முழுமையாகவும் 3,206 வீடுகள் சேதமும் அடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறநாயக்காவிலும் கேகாலையிலும் ஏற்பட்ட மண்சரிவில் 144 பேரின் நிலை என்னவென்று தெரியவில்லை என்று அறிவித்துள்ளார்கள். 3 கிராமங்களான ஸ்ரீபுர லங்கபிரிய பல்லேபகி ஆகிய இடங்களில் மண் சரிவு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்ட தாளமுக்கத்தினால் கடும் மழை காற்று ஏற்பட்டுள்ளது.

வடபகுதியில் இது வரை உயிர் சேதம் பற்றிய விபரம் இது வரை வெளிவரவில்லை இருந்த போதும் வன்னி பிரதேச வயல்கள் எல்லாம் வெள்ளத்தில் மூழ்கி பாதிப்படைந்துள்ளன. 3 நாட்கள் தொடர்ந்து பெய்த மழையினால் முல்லைத்தீவு நந்திகடல் சீற்றத்துடன் பாலத்திற்கு மேலாக பாய்ந்து ஓடுகின்றது என அப் பகுதி மக்கள் கூறுகிறார்கள்.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கட்டுகள் சீரமைக்கும் வேலைகள் நடைபெறுவதனால் குளத்தில் நீர் இல்லாமல் வான் கதவுகள் திறந்து இருப்பதனால் வன்னி பிரதேசத்திற்கு வெள்ளம் பாய்ந்து ஓடுகின்றது என்று கூறப்படுகிறது.

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## மீனம்பாக்கம் விமானநிலைய...

அன்றைய தினம் சென்னை மீனம்பாக்க விமான நிலையத்தில் கொழும்பு செல்லும் விமானத்தில் அதிகம் பாரம் நிறைந்த 2 பொதிகளுடன் கதிரேசன் என்று அழைக்கப்படும் ஒரு பயணி விமானத்தில் ஏறினார். எடை அதிகமாக உள்ளதால் கூடிய கட்டணம் செலுத்தி கொழும்பு செல்ல இருந்த எயர் லங்கா விமானம் அந்த எடை கூடிய 2 பொதிகளும் ஏற்றப்பட்டது. ஆனால் பொதிகளை ஏற்றி விட்டு கொழும்பு செல்ல இருந்த அந்த விமானத்தில் சம்பந்தபட்ட கதிரேசன் ஏறவில்லை. அந்த 2 பொதிகளையும் கொழும்பில் இருந்து லண்டன், கொழும்பில் இருந்து பாரிஸ் செல்ல இருந்த விமானத்தில் ஏற்றி விடுவது என்று திட்டமிட்டிருந்தார்கள். அந்தக் காலத்தில் பொதிகளை விமானத்தில் ஏற்றுவதற்கு முன்பு பயணிகள் தங்கள் பொதிகளை அடையாளம் காட்ட வேண்டும். ஆனால் அந்தப் பொதிகளுக்கு சொந்தக்காரனான கதிரேசன் பொதிகளை அடையாளம் காட்ட முன்வரவில்லை எனவே 2 பொதிகளும் விமானத்தில் ஏற்றப்படவில்லை 96 பயணிகளுடன் எயர் லங்கா குறிப்பிட்ட நேரத்தில் பயணமாகியது.

விமான நிலையத்தில், அந்தப் பொதியில் குண்டு இருப்பதாக அதிகாரிகளுக்குப் பல முறை அறிவித்த போதும் அதிகாரிகள் அவனுடைய எச்சரிகையை கவனத்தில் எடுக்கவில்லை பல முறை தொலைபேசி செய்தும் கேட்கவில்லை அந்த 2 பொதிகளும் காதை புளக்கும் சத்தத்துடன் வெடித்துச் சிதறின வெடித்த குண்டு விமான நிலையத்தின் மேற்கூரை வெடித்து சிதற வழிவகுத்தது. அதில் 30 பேர் உயிரிழந்தார்கள் சென்னையின் மும்பாய் ஊடாக அபுதாபிக்கு போக இருந்த 24 இலங்கையர்கள் பலியானார்கள். இவ்வாறு பலியான யாரையும் அடையாளம் காண முடியவில்லைஉடல்கள் சிதறி பல பகுதிகள் போய் ஆங்காங்கே விழுந்தன சிலரின் கை, கால்கள் இரும்பு கோபுரங்களில் சிக்குண்டு இருக்க காணக்கூடியதாக இருந்தது.

தினச்செய்தி தொடர்பான
விமர்சனங்கள் மற்றும் ஆக்கங்கள்
வரவேற்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு
தினச்செய்தி வாரமலர்
தில்லைக்கட்டி வீதி
சுன்னாகம்.

தொ.பேசி : 021 7539300
தொ.நகல் : 021 7539300
ஈமெயில் : thinacheithi@gmail.com

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வாழ்க்கை வாழ்வதற்கே ...

தனது மகளையும் பேரக் குழந்தைகளையும் பார்த்தும் பூரித்துப் போவார்கள் ஏரம்பரும் சிவகாமியும்.

பெற்றோர் தம் பிள்ளைகளைச் சரியானபடி வழிநடத்திக் கண்காணித்துப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். ஆசிரியர் பார்த்துக் கொள்ளுவார் என்று இருந்தால் பின்னர் வருந்த வேண்டி நேரிடும். அஞ்சலை உணர்ந்தவள் ஆகையால் தன் குழந்தைகளில் கவனம் எடுத்து வளர்கிறாள். சமுத்திரத்தில் உள்ள கற்பாறைகளில் கப்பல் வந்து மோதுவதால் அந்த இடத்தில் இன்னொரு கப்பல் வந்து மோதாமல் இருப்பதற்காக மிதவைகள் போடப்படுகின்றன. மிதவைகளை கண்டு அடுத்து வரும் கப்பல் விலகிச் செல்கின்றன. மனித வாழ்வுக்கு இது பொருத்தமானதே. பிறருக்கு வரும் துன்ப துயரங்கள் சமுகச் சீரழிவுகள் எதனால் ஏற்படுகின்றன என்பதனை அறிந்து தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் பாதுகாத்தல் வாழ்வு வாழ்வதற்காகும்.

தினச்செய்தி
என்றும் உங்களுடன்


காட்டா விநாயகர் ஆலயம்

# கடல் நீரில் எரியும் சுடர் விளக்கு
# முள்ளியவளையில் அற்புதம்



அற்புதம்!... அற்புதம்!... உப்பு நீரில் ஏற்றி வைத்த அகல் விளக்கு கடந்த 6 நாட்களாக சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. இந்த அற்புதம் முள்ளியவளையில் உள்ள காட்டா விநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை வரை நடந்து கொண்டிருக்கிறது.

சென்ற திங்கட்கிழமை சிலாபத்தை தீர்த்த கரைக்கு சென்று இதற்கென்று கோயிலால் நியமிக்கப்பட்டவர்களால் குடத்தில் கடல் நீர் எடுத்து வந்து காட்டா விநாயகர் ஆலயத்திலுள்ள அம்மன் மண்டபத்தில் வைத்து அந்த குடத்தில் 4 அங்குலம் நெய் தடவிய திரியை வைத்து கொழுத்தினர்.

இவ்வாறு குடத்தினுள் வைக்கப்பட்ட அகல் விளக்கு திங்கட்கிழமை 16 ஆம் திகதி தொடக்கம் சனி வரை சுடர்விட்டு எரிந்து கொண்டு இருக்கும். குடத்திலுள்ள அகல் விளக்கு கடல் நீர் விளக்கெரியும் போது வற்றிக்கொண்டே போகும். கோயில் பூசகர் கடல் நீரை அந்த குடத்தில் தேவையான அளவு ஊற்றிக் கொண்டே இருப்பார். இவ்வாறு உப்பு நீரில் விளக்கு எரிதந்து 6 நாட்கள் மடைபரவி காட்டா விநாயகர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் நடைபெறும்.

இச்சிறப்பினை சிலப்பதிகாரத்திலே காணக் கூடியதாக உள்ளது..

"முந்தித் தடங்கிரியலே பாண்டியன் தன்
- மதுரையை
முதுகனல் கொளுத்தியே ஒருசிலம் பதனால்
பிந்திவந் தங்கொணா மைக்கடவை தனிலும்
பேரான முள்ளிய வளைப்பதியில்
- வந்துறைந்தாய்"

"தந்திமுகன் கோவிலில் (காட்டாவிநாயகர்
ஆலயம்) வந்துமடை கண்டு
தார்கட லுப்புத் தண்ணீர் விளக்கேற்றி
அந்திப் பொழுதிலே நந்திக் கடற்கரையில்
வைகாசித் திங்களில் வந்தமர்ந்தாயே.

அற்புதம் வேறு - விஞ்ஞான ஆய்வுகள் வேறு என்பதற்கிணங்க... கடல் நீரில் தீபம் ஏற்ற முடியுமா? எனக் கேள்வி எழுப்பியோர், இச் செயலை நம்ப மறுத்தனர்.

எனவே இச்செயலை விஞ்ஞான ரீதியாகப் பரீட்சித்துப் பார்க்க முயன்றனர். இவ்வாறான ஆய்வுகள் பல தடவைகள் நடை பெற்றன.

1964 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து வந்த ஆய்வாளர்கள், தீர்த்தத்தில் தீபம் எரிவதைப் பற்றி ஆய்வு செய்தனர். எனினும் எவ்வித முடிவும் கண்டறியப்படாது திரும்பினர்.

மீண்டும், 1970 ஆம் ஆண்டிலும் இவ்வாறான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்கள், கடல் நீரிலே காணப்படும் உப்புக் கரைசல், தீபத்தை ஏற்றும்போது நெருப்பு எரியக் கூடிய ஒரு பொருளாக மாறுகின்றது எனப் பொருந்தாத, ஆதாரமற்ற கருத்தை முன்வைத்தனர். இக் கருத்தை ஆய்வுபூர்வமான முடிவாக எவரும் ஏற்கவில்லை.

இன்றுவரை கடல்நீரிலே தீபமேற்றுவது பற்றிய விளக்கத்தை, எந்த விஞ்ஞானிகளாலும் கொடுக்க முடியவில்லை.

அறிவுக்கும், மனித ஆற்றலுக்கும் மேற்பட்ட அற்புதம் அன்னையவள் சக்தியை தங்கள் இரு விழியால் காணப்பெற்று இஸ்டசித்திகளை பெற்றிட காட்டாவிநாயகர் ஆலயத்திற்கு ஆயிரக் கணக்கான பக்தர்கள் வருகிறார்கள்.

மேலும் 23.05.2016 ஞாயிற்றுகிழமை அதிகாலை காட்டா விநாயகர் ஆலயத்தில் அம்மன் சந்நிதியில் எரியும் அகல் விளக்கு அணைக்கப்பட்டு கடல் நீர் அடங்கிய குடத்தையும் மடையுடன் வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கு எடுத்து செல்லப்படும்.

வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் மீண்டும் குடத்தினுள் திரி வைத்து விளக்கு ஏற்றப்பட்டு பொங்கல் முடியும் வரை அந்த அகல் விளக்கு


வற்றாப்பளை கண்ணகை அம்மன்

சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கும்.

இது கடவுளின் அற்புதமே என்று கூறுபவர் பலர். எங்களை மெய்சிலிர்க்க வைக்கிறது என அதைக் கண்டு உணர்ந்த புரிந்து கொண்ட முள்ளியவளை மற்றும் வற்றாப்பளை மக்கள் கூறுகிறார்கள்.




இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு மே. 21, 2016 அன்று வெளியிடப்பட்டது.